# எழுத்து

## 81


| | |
|---|---|
| சிந்தனைத் தேக்கம் | 150 |
| சு. சங்கரசுப்ரமண்யன் | |
| பல்லி | 151 |
| நா. வெங்கட்ராமன் | |
| எல்லை | 151 |
| தர்மூசிவராமு | |
| கவிதையில் குழப்ப நயம் | 152 |
| ந. முத்துசாமி | |
| ''கார்னிவல்'' | 153 |
| தி. க. சிவசங்கரன் | |
| இலக்கியத்தில் தரம் | 158 |
| நீல. பத்மநாபன் | |
| லட்சியம் | 164 |
| தர்மூசிவராமு | |
| மோகன வேளை | 164 |
| ம. ந. ராமசாமி | |



ஏழாம் ஆண்டு

50 பைசா ஆசிரியர்: சி.சு.செல்லப்பா செப்டம்பர் 65

7-ம் ஆண்டு
ஏடு 81
செப்டம்பர்
1965

# எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

'எழுத்து' ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியன்று வெளிவரும் மாத ஏடு. தனிப் பிரதி காசு 50. ஒரு ஆண்டு சந்தா ரூ 5-00 வெளிநாடுகளுக்கு ரூ. 6-00 சந்தா கட்டுரை சம்பந்தமான கடிதங்கள் எல்லாம் 'எழுத்து' (EZHUTTHU) 19 A. பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி சென்னை-5 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

## சிந்தனைத் தேக்கம்

''பிறகு விழி திறந்து பார்க்கையிலே சூழ்ந்திருக்கும் பண்டைச் சுவடி, எழுது கோல், பத்திரிகைக் கூட்டம், பழம் பாய்-வரிசை எல்லாம் ஒத்திருக்க நாம் வீட்டில் உள்ளோம் என உணர்ந்தேன்''.

பாரதியின் குயில் பாட்டு முடிவு வரிகள், இன்றைய எழுத்துலகின் போக்கை நிர்ணயிக்க முன்வருகிறவனுக்கு சூத்திரமான முடிவை எளிதாகத் தேடித்தரும்.

எழுத்துலக சாதனங்கள், எழுதுவோர் எண்ணிக்கை, எண்ணம் பரப்பும் கருவிகள் அத்தனையும் பெருகி, இலக்கியத்தின் நவீன துறைகளையும் நாம் தொட்டுத் துலக்கிய பிறகு, ஆர அமர உட்கார்ந்து நிகரலாபக் கணக்குப் போட்டுப் பார்த்தால், பளிச் சென்று புலப்படுகிற உண்மை ஒன்று தான்— '' நாம் வீட்டில் உள்ளோம் ''. இலக்கிய யாத்திரையில் இருந்த இடத்திலேயே இருக்கிறோம் என்றால், கால் வலிக்க நடந்தது பொய்யா என்று முட்டியைப் பிடித்து விட்டுக் கொள்ளப் பலருக்கும் தோன்றும். விஷயம் என்ன வென்றால் இலக்கில் கொண்டு சேர்க்காத பாதையில் கால் கடுக்க நடந்து வந்திருக்கிறோம்.

பண்டைச் சுவடிகளைக் கட்டி வைத்து விட்டு, பழம்பாயை வீசி எறிந்துவிட்டு புதியவரிசையைப் படைக்கத் தெம்பில்லாமல், வ. ரா. சொல்லுகிற மாதிரி, விமோசனத்துக்கு வழி காட்டாத வித்தையையும் வித்தகத்தையும் செய்து கொண்டிருக்கிறோம். முப்பது வருஷங்களுக்கு முன்பு பொதுவாகவே எழுத்துலகில் தோன்றிய உத்வேகம், ஆதர்சம் எல்லாம் எங்கே போய் முடங்கிக் கிடக்கின்றன என்று நெஞ்சைத் தட்டிப் பார்ப்பதற்குக் கூட அவகாசம் இல்லை.

அன்று நாட்டிலே தோன்றிய விழிப்புணர்ச்சி சகல துறைகளிலும் பிரதிபலித்து பெரும் லட்சியத்தை நோக்கி அனைவரையும் ஈடுபடுத்திய போது, சிந்தனையில் உரமும் அதன் காரணமாக சிருஷ்டியில் தரமும் தாமாக ஏறின. அந்த லட்சியம் நிறைவேறியதால் இயக்க சக்தி தேய்ந்து கொண்டே வந்து பல்வேறு முனைப்புக்களிலும் அசிரத்தையும் வறட்சியும் தோன்றித் தங்கி விட்டன. இந்த உண்மையில், யாரும் முரண்பட மாட்டார்கள்.

இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் பாரதியைச் சுற்றியும் வ. ரா. வைச் சுற்றியும் செழுமையான வட்டங்கள் இயங்கிக் கொண்டிருந்த காலம் உண்டு. சுய சிந்தனை நிரம்பிய வல்லுனர்கள், ஆதர்ச சக்தியை உள்ளிழுத்து புதிய சக்தியை வெளித் தரும் ஆற்றல் பெற்றவர்கள், ஒரு குறிப்பிட்ட முனைப்பில் பணியாற்றியது வரலாறு மலர்ச்சி தோன்றி மறுமலர்ச்சியாகப் பரிணமித்த வேகம், அன்றைய சுழற்சியிலே நிதானிக்க முடியா விட்டாலும் இன்றைய வெறுமையிலே நின்று நோக்கி அதிசயிக்க முடிகிறது. நம்முடைய துரதிர்ஷ்டம் அங்கே தான் தொக்கி இருக்கிறது. புதிய எழுத்துச் சக்திகள் ஒன்று திரண்ட வேகம் வெள்ளப் பிரவாகமாக வழிந்திருக்கவும் வேண்டாம், அது வடிந்தவுடன் இன்று, மணற்பரப்பில் நின்று தவிக்கவும் வேண்டாம்.

இந்த வறட்சிக்கு மூல காரணம், பழைய ஆற்றலைப் போற்றாதது தான். அதனால், பண்டைச் சுவடிகளைக் கடை விரிக்க வேண்டும் என்பதில்லை. அவைகளைப் பிரித்துப் படிக்காமலே, பரணைப் பார்த்துப்பெருமைப் படுகிறோமே அதுதான் தவறு. மிகப் பழைய ஆற்றலை உணராமலே உணர்ந்து கொண்டதாகப் பெருமை பேசுவதைப் போன்ற ஆபத்து, சமீபப் பழமையை உணர மறுப்பதும். பாரதிக்கு முந்திய காலத்தைத் தெரிந்த அளவுக்குக் கூடுதலாகவே தெரிந்து கொண்டதாகப் போலிப் பெருமை பாராட்டத் துடிக்கிறவர்கள், பாரதி காலத்துப் பெருமைகளை, வ. ரா. காலத்துப் பெருமைகளை, தங்களது அசல் முன்னோடிகளின் பெருமைகளைக் கண்ணெடுத்துப் பார்க்க மறுக்கிறார்கள். திட்ட வட்டமாக அந்தக் காலத்துக்குப் பின் தோன்றியவர்கள் கூட அந்தக் காலத்தைத் தன்னுடைய பழமையாகக் கருதாமல் தனக்குச் சமகாலமாகப் பாவித்துக்கொண்டு அதன் பெருமையைத் துலக்குவது தன் கௌரவத்துக்குக் குறைவு என்றே கணக்குப்போடுகிறார்கள். கம்பனையும், வள்ளுவனையும், இளங்கோவையும் மறைக்காமல் ஆகாயத்தில் தூக்கி வைத்து அட்டகாசமாய்த்துதி செய்த பிறகும், தன்னையும் மகாகவி ஆக்கிக் கொண்ட பாரதியை உணரவதில்லை இவர்கள். தோன்றும்போதே பெரிய மனுஷத்தனம் தான் வளர்கிறது. போட்டி யுகத்தின் சாபக்கேடுகளில் இதுவும் ஒன்று.

அடுத்தபடியாக, 'புதுமை' என்பதற்குத் தவறான பொருள் நிலைத்து விட்டது மற்றொரு சாபக்கேடு. இலக்கியத்திலே இருக்க வேண்டிய உணர்ச்சிகளை வாழ்க்கையிலே சுவைக்க விரும்புகிறோம். வாழ்க்கையிலே இல்லாததை இலக்கியத்திலே காண விழைகிறோம். அதுவும், காந்தி யுகத்திற்குப் பிறகு வீரத்திற்கும் அறத்திற்கும் சரியான பொருள் கொள்ள முடியாமல் தவிக்கிறோம். அறவழி அமைதியைக் கோழைத்தனம் என்றும், மறவழி முரட்டுத்தனத்தை வீரம் என்றும் பராட்டத் துணிந்து விட்டோம். இந்த முரண்பாட்டு

இலக்கண பலத்திலே, புதுமை செய்வதாக நம்மையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த உண்மையை அறிவதற்கு, பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய நடைமுறையை வ. ரா. வின் பேனா படம் பிடித்துக்காட்டியதைப் புரட்டிப்பார்த்தால் போதும். நாம் எங்கே இருக்கிறோம், வீட்டில் உள்ளோம் என்ற நிலையா இல்லையா என்பது தெரிந்து விடும்

''கற்பனை இலக்கியம் வேறு. பொய் வதந்திகளைப் பரப்புவது வேறு.இரண்டும் கற்பனை அல்ல கற்பனை இலக்கியம் பொழுது போக்காக இருக்கும். பொய் வதந்திகளைப் பரப்புவது, நாட்டைச் சின்னா பின்னப்படுத்தி அதைப் பாழாக்குவதாக முடியும்.

''படிப்பவர்களுக்குப் புரிய வேண்டும் என்ற காரணத்தைச்சாக்காகக் கொண்டு, கேவலமான அல்லது கீழ்த்தரமான பாஷையைக் கையாளுவது பத்திரிகைத்தொழிலுக்கு கௌரவம் அளிக்காது.''

திட்டமாகக் குறிப்பிட்டு தெளிவாக மொழிகிற வ. ரா. அன்று ஒரு எச்சரிக்கையும் விடுத்தார். ''மருந்து கொடுப்பதில், டாக்டர்கள் எவ்வளவு ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டுமோ,அவ்வளவு ஜாக்கிரதையுடன் பத்திரிகை ஆசிரியர்கள், நிருபர்கள் முதலியவர்கள் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், தலைவலி போக, திருகுவலி வந்து விடும்.''

அந்த ஜாக்கிரதை இல்லாததால், எச்சரிக்கையின் சாரத்தை இன்று உணர்கிறோம். முதலியவர்கள் என்ற வார்த்தையின் விளக்கமாக எழுத்தாளர்கள், கலைஞர்கள், அரசியல் வாதிகள், சமூக சீர்திருத்த வாதிகள் என்று சேர்த்துக்கொண்டே போகலாம். ஜனசமூகத்தை மொத்தமாகவோ பகுதியாகவோ தங்கள் செல்வாக்குக்குக் கட்டுப்பட வைக்கிற சாமர்த்தியசாலிகள் (அல்லது இயல்பு படைத்தவர்கள்) அந்தப் பட்டியலில் அடங்குவார்கள் மருந்து கொடுக்கத் தெரியாதவர்கள் மருத்துவர்களாக மாறி விட்டார்கள். மலடிகள் பிரசவம் பார்க்கிறார்கள். தலைவலி போக, திருகுவலி வந்துவிட்டது. நீண்ட போராட்டத்திற்குப்பின் அடிமைத்தனத்தைப் போக்கினோம். புதிய அடிமைத்தனங்களை, கட்டுப்பாடுகளைச்சுமத்திக்கொண்டோம், ஆனால் வித்தியாசம், தலைவலி தெரிந்தது. மருந்தைத்தேடி அலைந்தோம். திருகுவலியை உணர்ந்தும் உணராமல் காலம் கடத்துகிறோம். மருந்தைப் பற்றி யோசிக்கவும் மறுக்கிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஆதர்ச சக்திகள் இல்லாதது இன்றைய பெரும் குறை. வ. ரா. வை 'சக்தி' என்றும் 'சாதனை' என்றும் வர்ணிப்பார்கள் தானே சிந்தித்தது மட்டு மின்றி, தானே படைக்கவும் முடிந்தது அவரால். ராகம் தாளம், பாவம் என்று வக்கணையாகப் பாடினாலும் பாரதியின் பாட்டில் சிந்தனை இருந்தது. கச்சேரிக்காகக் கீர்த்தனை பண்ணவில்லை (இன்று வேண்டுமானால் நாம் மேடையிலும் திரையிலும் பாரதி பாட்டைக் கேட்டு விட்டு ராகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். உள்ளே இருக்கிற 'சங்கதி'யை உணராமல் பாடகர் உதிர்க்கும் சங்கதியை ரசித்து சபாஷ் போடுகிறோம்.) சக்தியும் சாதனையும் இணைந்தவர்கள் தோன்றுவதற்கு வழி, நல்ல சிந்தனையாளர்கள் படைப்புத் தொழிலில் ஈடுபட வேண்டும் தங்கள் கருத்துக்களைக் கொட்டும் களமாக சிருஷ்டி இலக்கியத் துறையை மாற்றுவதற்காக அல்ல. இலக்கிய பூர்வமான படைப்புக்களில் சிந்தனையின் சாரத்தைத் தேக்கி வைப்பதற்காக சிந்தனை வறட்சிகுறைந்தால் சிருஷ்டியில் காணும் தேக்கம் குறையும், 'கற்பனையே ஆனாலும் வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க யாதானும் சற்றே இடமிருந்தால் கூறீரோ, என்ற பாரதியின் ஏக்கம் எழுதுபவனுக்கு இருந்தால் எழுத்திலே புதிய துடிப்பு முளைவிடும். அந்தத் துடிப்பே திருகுவலி தீர்க்கும் மருந்தாக அமையும்.

—சு. சங்கரசுப்ரமண்யன்

---

## பல்லி

நா. வெங்கட்ராமன்

வாழ்க்கை வெண்சுவரில்
இனைப்பாற இறகுமடித்து
அனுபவங்கள் அமருகையில்
பாய்ந்தோடி
கருத்தால் வளைத்து விழுங்கும்
பல்லி நான்.

உணர்ச்சிகள்
கழுத்தாய்த் துடித்து
சொல்லாய் வெடிக்கையில்
பல்லியென் சொல்லுக்குப்
பலன் உண்டு—
கிழக்கே சுபம்.
மேற்கே நோய்.
சுவர் வழுக்கி
விழுவதற்கும்
பலன் உண்டு—
தலையில் கலகம்.
பாதத்தில் ரோகம்.

என்னைச் சீண்டினாயோ
வாலை
தானமாய்க் கொடுத்துவிட்டு
மறுவாலைத் தேடிக்கொள்ளும்
மந்திரப் பல்லிநான்.

## எல்லை

தர்மூ சிவராமூ

கருகித்தான் விறகு
தீயாகும்,
உருகாமல் பனி
நீராய் ஓடுமா?
ஆனாலும்,
அதிர்கிற தந்தியில்
மௌனம் குந்தாது
கொசு
நெருப்பில் மொய்க்காது.

# கவிதையில் குழப்ப நயம்

## ந. முத்துசாமி

எழுத்துவில் வெளியான கவிஞர் சி. மணி பின் அணைப்பு என்ற கவிதை இந்தக் காலத்தின் தலைசிறந்த காதல் கவிதை. அதைப் படிக்கிற போது பல நினைப்புகள் கொத்துக் கொத்தாய் மனதில் வந்து விழுகின்றன. இன்னதுதான் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாமல் வாசகனின் அனுபவத்திற்குத் தகுந்தது போல பல கற்பனைகளைத் தூண்டிவிடுவது நல்ல கவிதையின் இலக்கணங்களில் ஒன்று. பூவின் காம்பில் மலர்ந்த பல இதழ்களைப் போல இந்தக் கவிதையில் கற்பனை மலர்ந்திருக்கிறது அது எவ்வளவு தூரம் மணம் வீசுகிறது என்று முகர்ந்து பார்ப்பதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம்.

**இரண்டு கவிதைகள்**

இன்னொரு பழைய காதல் கவிதை இருக்கிறது. அணைப்பு கவிதையை ரசிப்பதற்கு அது மிகவும் துணையும். அதுவும் ஒரு சிறந்த காதல் கவிதை தான்.

பழைய கவிதை இது.

நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச்சார்ந்து
தீரத் தீரும்
சாரருடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத்தீரத் தீர் பொல்லாதே.

இந்த இரண்டு கவிதைகளுக்குள்ளும் சில ஒற்றுமைகள் இருக்கின்றன. இரண்டு கவிஞர்களும் நீரையும் நெருப்பையுமே உவமையாகப் பயன் படுத்தி இருக்கிறார்கள். இரண்டு முரண்பட்ட குணங்கள் காதலுக்கு இருப்பதாக இருவரும் சொல்கிறார்கள் பழையதில் தலைவியும் புதியதில் தலைவனும் பேசுகிறார்கள்.

அணைத்தால் குளிர்ந்திருப்பது நீரின் குணம் நெருங்கினால் சுடுவது தீயின் குணம். சாரல் நாடனுடைய நட்பு அருகில் நெருங்க நெருங்க நீரைப் போலக் குளிர்ந்திருக்கிறது. தூர விலக விலக சுடுகிறது. இந்த இரண்டு முரண்பட்ட குணங்களும் ஒரே தலைவனிடம் இருக்கின்றன. இரண்டு குணங்களில் ஒன்றிற்குள்ளேயே மேலும் ஒரு முரண்பாடு இருக்கிறது. நெருப்பு நெருங்கினால்தான் சுடுகிறது; விலகிப்போனால் சுடுவதில்லை. ஆனால் அவன் நெருங்கினால் தண்ணென்று இருக்கிறான் அவளிடமிருந்து விலக விலக அவன் சுடுகிறான் சுடுகின்ற தூரத்தில் தான் வேற்றுமை. அவளுக்கு இது ஆச்சரியமாகவும் இருக்கிறது, வேதனையும் தருகிறது இந்த இரண்டு உணர்ச்சிகளும் அவள் உள்ளத்தில் மோதிக் கொண்டு நிற்கின்றன. அவை வெளிப்படையாக கவிதையில் தெரியவில்லை. கவிதையின் ஆழத்தில் மறைந்து கிடக்கின்றன. இந்த உணர்ச்சி மோதலையும் முரண்பாடுகளையும் துருத்திக் கொண்டு வெளித் தெரியாமல் அமைதியாகத் தொட்டுக் காட்டியிருக்கிறார் கவிஞர்,

திருக்குறள் காமத்துப் பாலின் ஒரு குறள் புணர்ச்சி மகிழ்தல் என்ற அதிகாரத்தில் நான்காவது குறளாய் வருகிறது.

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்றும்
தீ யாண்டும் பெற்றாள் இவள்.

இந்தக்குறள் பெண்ணின் புணர்ச்சியைத் தீயென்றே சொல்கிறது. இந்தத் தீ உண்மையான தீயிலிருந்து வேறுபட்டது அவளை விட்டு நீங்கினால் சுடுகிறது. அவளை அணுகினால் தண்ணென்று இருக்கிறது. இப்படிப்பட்ட தீயை இவள் எந்த உலகத்தில் பெற்றாள் என்று வியக்கிறார் வள்ளுவர். வள்ளுவர் தண்ணென்னும் அவளுடைய குணத்திற்கு நீரை உவமையாகக் கொண்டு வரவில்லை. அவர் சொல்ல வந்ததற்கு அது தேவை இல்லை. ஆனால் சாரல் நாடனுடைய காதலியின் மன நிலையைக் காட்டுவதற்கு இந்தக் கவிஞருக்கு நீரையும் சொல்ல வேண்டியிருந்தது. இவர் இந்தக் கவிதை எழுதுவதற்கு குறள் தூண்டுதலாய் இருந்திருக்கக் கூடும். அந்தத் தூண்டுதலை வைத்துக் கொண்டு ஒரு சாதனையாகத் தன் கவிதையைச் செய்து விட்டார் கவிஞர்.

இனி கவிஞர் சி. மணியின் கவிதையைப்பார்க்கலாம்.

என்னை
நீரா யணைத்தாய்! அணைத்து
விட்டதும் கரியானேன்; ஆனதும்
இருவிழிப் பொறியால் தீ மூட்டித்
திரும்ப நெருப்பாக்கி

இரண்டு முரண்பட்ட குணங்கள் தலைவியிடம் இணைந்து இருப்பதாக இதில் தலைவன் சொல்கிறான். அவள் நீராகவே இருக்கிறாள். அதே நேரத்தில் அவளுடைய இரு விழிகளும் தீப் பொறிகளாக இருக்கின்றன என்று உருவகப் படுத்துகிறார் கவிஞர்.

முன் கவிதையில் தலைவனுக்கு நீரின் குணமும் தீயின் குணமும் இருப்பதாக மட்டும் சொல்லி விட்டு தலைவி அதால் பாதிக்கப் படுகிறாள் என்று நாம் பெற வேண்டும் என்று அதைச் சொல்லாமல் விட்டு விட்டார் கவிஞர். ஆனால் பின் கவிதை

(162-ஆம் பக்கம் பார்க்க)

# "கார்னிவல்"

## தி க. சிவசங்கரன்

1936-ல் 'மணிக்கொடி'யில் எழுதப் பெற்ற இக்கதை, எப்பொழுது வாசித்தாலும், என் உள்ளத்தில், ஒரு மயக்கத்தைத் தோற்றுவிக்கிறது!

அச்சிலே பதினெட்டரை பக்கங்கள் உள்ள இச் சிறுகதையைச் சுமார் அரை மணி நேரத்தில் படித்துவிடலாம். ஆனால், இது எழுப்புகிற நினைவு அலைகள் ஒரு ரஸிக நெஞ்சில் நெடுங்காலம் ஊடாடிக் கொண்டிருக்கும்!

இக்கதையின் நிகழ்ச்சிகளும், உணர்ச்சிகளும், சிந்தனைகளும் ஒரு தலைசிறந்த தமிழ்க் கவிதையிலுள்ள பாவம் ராகம், தாளம் போல இணைந்து பிணைந்து நமக்கு அபூர்வ இலக்கிய அநுபவத்தை நல்குகின்றன.

வனஜா என்னும் இளம் பெண். அவள் ஒரு தாசி; வீணை வாசிப்பதில் தேர்ந்தவள்; வீணையை மீட்டும் பொழுது அதன் சுருதி நாதத்தில் தன்னையே மறக்கக் கூடியவள். அவளுக்கு வீணை என்பது வெறும் இசைக் கருவியன்று; அவளது நாடி நரம்புகளைத் தொட்டு உலுக்கி, இன்ப வேதனையில் ஆழ்த்தும் சாதனம் அது. சுருங்கச்சொன்னால், வனஜாவே ஒரு நல்லிசை வீணை!...

அந்த வீணை ஒரு இரவின் முன் நேரத்திலும், நடுநிசியிலும், பின்னிரவிலும், ஒரு பணக்கார மைனரால் எவ்வாறு மீட்டப்படுகிறது என்பது தான் இக்கதை.

இளமைத் திமிரும், இன்ப போதையும், செல்வமும், செல்வாக்கும் மிக்க ஒரு பணக்கார வாலிபன், வனஜாவைக் 'கார்னிவல்ஷோ'வுக்கு மோட்டாரில் அழைத்துப் போகிறான், ஒரு நவராத்திரி சமயத்தில்.

கார்னிவல் ஷோவுக்கு அவனுடன் போகு முன்பும், போய்த் திரும்பிய பொழுதும் வனஜாவுக்கு ஏற்படும் உணர்ச்சித் துடிப்புக்களே இக் கதையின் இதய நாதமாகும்.

வனஜா தன்னுடைய அநுபவத்தை வாசகர்களிடம் கூறுவதுபோல் எழுதியிருக்கிறார், பி எஸ். ராமையா. முன்னிரவில் வனஜாவின் மனநிலை எப்படி இருந்தது?

"அவர் ரொம்ப இனிமையாகக் குனிந்து என் கன்னத்தில் மூச்சுக் காற்றுப் படும்படி நின்றுகொண்டு 'வனீ! வீணை வாசியேன்' என்று கொஞ்சலாகச் சொன்னார்.

'அவர் என்னைப் பல பெயர்களிட்டுக் கூப்பிடுவார். வனஜாக்ஷி என்று என் முழுப் பெயரையும் சொல்லிக் கூப்பிட்டால் அதற்கு ஒரு பொருள். அப்போது அவருடைய நெஞ்சம் என் மயக்கத்தில் சரியாக லயிக்கவில்லை யென்று சொல்லலாம். பிறகு, சிறிது சிறிதாகப் பெயர் குறுகத் தொடங்கும். வனஜா, வனஜி என்றெல்லாம் மாறிக் கடைசியாக 'வனீ' என்று ஆகிவிடும். அதுதான் அவருடைய பிரேமையின் உச்ச ஸ்தாயியைக் குறிக்கும் ஸ்வரஸ்தானம் என்பது எனக்குத் தெரியும்.

'அப்போது என்னுடைய மகிழ்ச்சிக்கும் மனநிறைவுக்கும் எல்லை காட்ட முடியாது...என் காலிலிருந்து உதிரும் சிறு தூசியை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொள்வதையே சுவர்க்க அநுபவமாக மதிக்கு மளவு அவர் என்னிடம் மயங்கி நிற்கும்போது, அந்த உண்மையைத் தெளிவாகப் புரிந்துகொண்ட எனக்குப் பூரிப்பும், பெருமை உணர்ச்சியும் இல்லாமலிருக்குமா? ரொம்ப கர்வத்துடனும், பரம திருப்தியுடனும் வீணையைக் கையிலெடுத்தேன்' இவ்வாறு தன் கதையைக் கூறத் தொடங்கும் வனஜா, எவ்வாறு கதையை முடிக்கிறாள்? அவளது பின்னிரவு உணர்ச்சிகள் யாவை? வனஜா சொல்கிறாள்:—

'உள்ளே அவர் உறக்கத்தில் புரண்டபோது விழித்துக்கொண்டு விட்டார் போலிருக்கிறது. 'வனி!' என்று கூப்பிட்டார். இதோ வந்தேன் என்று பதில் சொல்லித் திரும்பினேன்.

'ஆனால், ஐயோ! அந்தச் சொல்லிலிருந்த கசப்பு! அவருடைய மோக வெறியின் உச்ச ஸ்தாயியைக் காட்டும் ஸ்வரஸ்தானமான அந்தச் சொல்லிலிருந்த அந்தக் கசப்பை நான் எப்படிச் சொற்களால் காட்டமுடியும்? இருபது வருஷமாகியும் அன்று என் நெஞ்சில் நிறைந்த அந்தக் கசப்பு இன்னும் மாறவில்லையே!....

வனஜாவுக்கு முன்னிரவில், மகிழ்ச்சி, மனநிறைவு, மிகுந்த கர்வம், பரம திருப்தி!

பின்னிரவில், களிப்பு கசப்பாகிறது; நிறைவு குறைவாகிறது; பெருமையும் பூரிப்பும் விம்மலும் விசும்பலுமாகின்றன ஏன் இந்நிலை அவளுக்கு?

பின்னிரவில் தான், மைனரின் உண்மை உள்ளத்தை அவள் காண்கிறாள். அப்போதுதான் அவளுக்குச் சத்திய தரிசனம் கிட்டுகிறது! தான் மைனரின் வெறும் விளையாட்டுக் கருவி என்பதையும் பொதுப் பொருள் என்பதையும் அத்தருணம் தான் அவள் நன்கு உணர்கிறாள்!

அவள் காலிலிருந்து உதிரும் சிறுதூசியை எடுத்து அவர் தன் கண்களில் ஒற்றிக்கொள்ளவில்லை; அவருடைய கால் தூசியாகவே அவளை மதிக்கிறார் என்ற சுரணை உண்டாகிறது வனஜாவுக்கு!

முன்னேரத்தில் அவள் தன்னை மறந்து வீணை வாசித்துப் பாடிய பொழுது, அவளது வீட்டு வாசலில் சில கூலிக்காரர்கள் சூடாகப் பேசி உரக்க வாதமிட்டுத் தமக்குள் கூச்சல் போடுகிறார்கள். அவர்களது உழைப்புக்குரிய கூலியைக் கொடுக்காமல், ஒருவன் கொஞ்சம் கள்ளை மட்டும் கொடுத்து ஏமாற்றப் பார்த்தானாம்! ரொம்ப கர்ண கடூரமான மொழியில், அதனினும் கடூரமான ஸ்வரத்தில் அவர்கள் எழுப்பிய கூச்சல், வனஜாவின் சங்கீதத்தை ஒரே கணத்தில் குலைத்து நொறுக்கி விடுகிறது. வீணை வாசிக்கும் அவளது விரல்கள் நின்று விடுகின்றன. இதனால் ஆத்திரம் கொண்ட மைனர், வீதிக்கு விரைந்தோடி, கைப்பிரம்பை

இடது சாரி, வலது சாரியாக அக்கூலிகள்மீது சுழற்றுகிறார்! அவர்கள் 'இல்லேசாமி; பாருங்க சாமி' என்று ஆளுக்கு ஒரு விதமாகக் கூவிக் கொண்டே அங்கிருந்து ஓடுகிறார்கள்! ....

'அவர்கள் ஏன் ஓடினார்கள்? கோழைத் தனத்தாலா? குற்ற உணர்வினாலா? என்று சிந்திக்கிறாள் வனஜா......

'வா வனஜா! கார்னிவல் ஷோவுக்குப் போய் வருவோம். அந்தத் தடியன்களால் மனசு என்னவோ போல ஆகிவிட்டது. நம்முடைய சுக சங்கீதத்திலே கரகரப்புத் தட்டிவிட்டது. எழுந்திரு' என்கிறார் மைனர். மைனரின் சங்கீதம், தேக சுகத்தை அடிப்படையாகக் கொண்டது! வனஜா என்னும் பதினெட்டு வயது மங்கையை மனமார அநுபவிப்பதற்கு அவருக்கு மதுவும், வினைசானமும் தூண்டுதல்கள்! ஏணிப்படிகள்! இதற்கு யாராவது, எதுவாவது, குறுக்கே நின்றால் மாறுகத் தோன்றும் மைனர் புலியாக மாறிவிடுவார்! ..

பாவம்! இந்த உண்மையைத் துவக்கத்தில் வனஜா அறியவில்லை. மைனருடைய சுக சங்கீதத்துக்கும், தன்னுடைய ஆன்ம இசைக்கும் எல்லையற்ற வேறுபாடு உண்டு என்பதை அவள் இறுதியிலேயே அதிர்ச்சியுற்றுப் புரிந்து கொள்கிறாள்! அவரது உடலின்பத்துக்கு உட்படாமல் ஒதுங்கி நின்றதால் தானே பின்னிரவில், மைனரின் 'வனி' என்ற சொல்லில் கசப்பும், கரகரப்பும் ஏறி நிற்கின்றன?......

மைனரின் 'சுக சங்கீத' தத்துவத்தை, முன்னிரவில் புரிந்து கொள்ளாத அப்பாவி .வனஜா, ஐந்தே நிமிஷத்தில், அவருடன் கார்னிவலுக்குக் கிளம்புகிறாள்.

'என் எஜமானர் சந்தோஷம் தானே என் லட்சியம்! அவருடைய 'நான்' எவ்வளவுக்கெவ்வளவு திருப்தியடைகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு எனக்குத்தானே லாபம்' என்று வெள்ளை உள்ளத்துடன் அவள் குதித்துக்கொண்டு காரில் ஏறுகிறாள்......

மைனரின் 'நான்' வேறு! வனஜாவினுடைய 'நான்' வேறு! மைனரின் 'லட்சியம்' வேறு; வனஜாவின் 'லட்சியம்' வேறு! மைனரின் சந்தோஷம்' வேறு! வனஜாவின் 'சந்தோஷம்' வேறு! மைனருடைய 'திருப்தி' வேறு; வனஜாவின் 'திருப்தி' வேறு! மைனரின் 'லாபம்' வேறு; வனஜாவின் 'லாபம்' வேறு!...இதற்குச் சான்றாக விளங்குகிறது, கார்னிவலில் மைனரின் நடத்தை.

இது பற்றி வனஜாவே வர்ணிக்கட்டும்:—

'கிங்ஸ் கார்னிவல் ஷோவில் அன்று சொல்ல முடியாத கூட்டம். ஆண்களும் பெண்களும் ஜே ஜே யென்று வந்து குவிந்திருந்தனர். விதம் விதமாக உடைகளணிந்து அவர்கள் அந்த 'வேடிக்கைச் சந்தையை' ஒரு வர்ண விபரீதப் புதுமை உலகமாக்கிக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே நுழைந்தவுடன் செவிடுபடச் செய்யும் ஜோ ஜோ வென்ற இரைச்சல் எழுந்து எங்களைச் சூழ்ந்து கொண்டது. அதில் மெய்ம் மறந்து கூத்தடித்துக் கொண்டிருந்த அந்தப் பெரிய மனிதக் கூட்டம் கண்முன் விரிந்தது.

திஞ்சு தினுசான ராட்டினங்கள். எல்லாவற்றிலும் நிறைந்திருந்த மக்கள். அவற்றின் சுழற்சிகளினால் எழும் மயக்கத்துடன் கூவிச்சிரித்து அவர்கள் போடும் கூசசல்கள் !

எங்கும் ஒரே இரைச்சல். ஒன்றுடன் ஒன்று சுருதி கலவாத பேதங்களுடன் கூச்சல்கள் !

என்னுடைய வீணைச் சங்கீதத்தைக் கலைத்த முரடர்களின் கூச்சல் அவ்வளவுக்கு மிடையில் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு பிரமை இருந்துகொண்டிருந்தது. அவர்கள் கூச்சலுக்கும்.அந்த வேடிக்கை மைதானவளைவுக்குள் எழுந்த கூச்சலுக்கும் அடிப்படையில் ஏதோ வேறுபாடு இருந்ததாகப் பட்டது. இங்கே கேட்ட சத்தம் ஒவ்வொன்றும் அந்த இரவின் நியாயமான நிசப்தத்தைக் கலைக்க எழும் அபசுரங்களாக ஒலித்தன. ஆனால், அந்த முரடர்களின் குரல்கள்? —இவ்வாறு சிந்திக்கிறாள் வனஜா.

வீணையின் சுருதியோடு இயைந்து பாடும் போது, வனஜாவுக்கு மயக்கநிலை தோன்றும். ஆனால், கார்னிவலுக்கு வந்திருக்கும் கூட்டத்திற்கு, மெய்ம்மறக்க வேண்டுமானால், 'ஜோ ஜோ' வென்ற இரைச்சல் வேண்டும்! தினுசு தினுசான ராட்டினங்களில் அவர்கள் ஏறிச் சுற்றவேண்டும்! விதம் விதமாக உடை அணிந்து வந்திருக்கும் பெரிய மனிதக்கூட்டம் சந்தை இரைச்சலில் சந்தோஷமடைகிறது:

இந்த வேடிக்கை மனிதர்களின் கூச்சலையும், கூத்தடிப்பையும் பார்க்கும்போது, முன்னிரவில், வீட்டு வாசலில், கூலிப் பங்கீட்டில் கூச்சலிட்டு. மைனரிடம் பிரம்படி வாங்கி ஓடிய, உழைப்பாளரின் ஓலத்தில் ஓரளவு நீதி இருப்பதாகவே வனஜாவுக்குத் தோன்றுகிறது போலும்!

'கார்னிவல்' என்னும் வேடிக்கைச் சந்தையில் இவள் கேட்ட சத்தம் ஒவ்வொன்றும், அந்த இரவின் நியாயமான நிசப்தத்தைக் கலைக்க எழுந்த அபசுரங்களாக வனஜாவுக்குத் தோன்றுவது இயற்கைதான். ஆனால், மைனருக்கு ? ஏழைக் கூலிக்காரர்களின் மீது வசை மாரி பொழிந்து, பிரம்பால் விளாசி விரட்டிய மைனருக்கு அந்தக் கார்னிவல் எப்படியிருந்தது ?

வனஜா கூறுகிறாள்:—

'அவர்களுடைய சண்டைக் கூச்சலைத் தாங்க இயலாமல் அப்படிச் சீறிப் பாய்ந்த அவர் இங்கே தமக்கு இயற்கையான, சொந்தமான ஒரு உலகத்தில் நுழைந்தவர் போலக்காணப்பட்டார்.

அவருடைய முகத்தில் அவருடைய உற்சாகத்தின், கோலாகலத்தின் வெறிக்களை படர்ந்திருந்தது. ஒரு குழந்தைபோல, பொறுப்பற்ற காளை போல, அவர் அங்கிருந்த விளையாட்டுக்களில் கலந்து கொண்டார். என்னையும் அவற்றில் ஈடுபடும்படி வற்புறுத்தாமல் வற்புறுத்தி இழுத்தார்.

என் மனம் கலங்கிப் போய்விட்டது. சுருதி கலைந்துவிட்டது. மறுபடி அதைக் கூட்ட என்னால் இயலவில்லை.

இரவு பன்னிரண்டரை மணிக்கு நாங்கள் அங்கிருந்து புறப்பட்டோம். அவர் முகம் அவ்வளவு நேரம்.அடித்த கூத்தின் களையுடன் சோபையுடன் திகழ்ந்தது. அவருடைய கண்களில் நான் இரவின் முன்னேரத்தில் முதன் முதலாகக் கண்ட

அதே ஒளியைக் கண்டேன். அவர் என்னிடம் கொண்டிருந்த மோக வெறியின் ஒளி எனக்கு நன்ருகப் புலனுயிற்று.'

கார்னிவல் என்னும் வர்ண விபரீதப் புதுமை உலகில், வேடிக்கைச் சந்தையில் நிலை கொள்ளா மல் குழம்புகிறது வனஜாவின் நெஞ்சம்! தன் னுடைய 'நான்' வேறு. மைனருடைய 'நான்" வேறு என்பதை அவளுக்குத் தெளிவாக்கிய ஞான பூமியே கார்னிவல்!...

நள்ளிரவில் இருவரும் வெவ்வேறு மனநிலை யில் வனஜாவின் வீடு திரும்புகிருர்கள். கூத்தை வெறுக்கும் ஒரு மனமும், கூத்திஞல் போதை யேறிய இன்னெரு மனமும் அக் காரில் இருந்தன. அவர்கள் வீடு திரும்பும் போது நடந்த ஒரு முக் கியமான நிகழ்ச்சி, வனஜாவின் உள்ளத்தை மிக வும் பாதிக்கிறது.

அதைப்பற்றி வனஜாவே கூறட்டும்:—

'வண்டி பெரிய தெரு வழியாக ஓடிக் கடை சிச் சந்தில் திரும்பியது. சிறிது தூரம்தான் போயி ருக்கும். எதிரில் ஒரு சிறிய ஜனக் கூட்டம் நின்று வழியை அடைத்துக்கொண்டு இருந்தது. மோட் டார் குழாயை விடாமல் அழுத்திக் கூவ வைத்துக் கொண்டே இருந்தார் அவர். அப்பா! என்ன கர்ண கடூரமான தொனி! அந்தக் குழாயின் அல றலை முன்ஞல் நின்ற கூட்டத்திலிருந்த யாருமே கேட்டதாகத் தோன்றவில்லை. யாரும் நின்ற நிலையை விட்டு அசையவே யில்லை. அந்தக் காட்சி யைப் பார்த்தவுடன் என் மனத்தில் எழுந்த எண் ணம் என்ன தெரியுமா?

'இவர் தன்னுடைய பணப்பெருமையை மோட்டார் குழாயொலியாக மாற்றி அவர்கள் காதருகில் கொண்டுபோய் ஊதிக்காட்டினர். ஆனுல், அவர்கள் 'உன்னைப் பார்த்து வியக்கவோ அல்லது பிரமிப்பும் பொருமையும் கொள்ளவோ இப்போது எங்களுக்கு நேரமில்லை என்று அசட்டை செய்து நின்ருர்கள்!

'அவர் ஆத்திரத்துடனும், பட படப்புடனும் காரிலிருந்து குதித்து இறங்கினுர். ரொம்ப அதட் டலாக, 'என்னடா இது, ரோட்டை அடைத்துக் கொண்டு?' என்று கூவிக்கொண்டே கூட்டத்தை அணுகினுர்.'

மேற்கண்ட வரிகளைப் படிக்கும்போது, வன ஜாவின் மனேபாவம் ஓரளவு நமக்குப் புலனு கிறது. மைனரின் பணப் பெருமையையும், கர்ண கடூரக் குழாயொலியையும், ஆத்திரத்தை யும், படபடப்பையும், அதட்டலையும் அலட்சியம் செய்யும் அளவுக்குப் பின்னிரவில் வனஜாவின் மனமும் பக்குவப் பட்டுவிட்டது! மைனருக்கு வன ஜாவின் உள்ளத்திலிருந்த 'எஜமான்' ஸ்தானம் மெல்ல மெல்ல அகலத்துவங்கி விட்டது! மைன ரின் அந்தஸ்தையும், செல்வப் பளபளப்பையும், இப் போது வேறு கண்ணேட்டத்தில், சாதாரண மக்க ளின் கருத்தோட்டத்தில் எடை போடத் தொட ங்கி விட்டாள் வனஜா! அதாவது ஆடம்பர மைனரை விட்டு, அக உலகில் நெடுந்தொலைவு விலகிச் செல்கிருள் வனஜா!... ...

காரிலிருந்து குதித்து இறங்கிய மைனரை ரோட்டை அடைத்துக் கொண்டிருக்கும் கூட்டம் சூழ்ந்து கொள்கிறது ஆனுல், தொந்தரவு ஏதும் செய்யவில்லை. அப்புறம்? ...

வனஜாவின் வாய்மொழியைக் கேட்போம் —

'கூட்டத்தின் நடுவில் ஒரு பெண். என் வயது தான் இருக்கும். பதினெட்டிலிருந்து இருபதுக் குள். நிறத்தில் கறுப்பு சாதாரணமான ஒரு மலிவுச் சேலைதான் கட்டியிருந்தாள். கழுத்தில் ஒரு கண்ணுடி மணிமாலை. அவளுடைய உருவம் இளமையில் சரியான ஊட்டமில்லாததாலோ அல் லது வேறு காரணத்தாலோ வெம்பிப் போனது போலத் தோன்றியது

'கூட்டத்துடன் முன்னேறி வந்த அந்தப் பெண் அவர் எதிரில் வந்து நின்று, 'பாருங்க சாமி, இவன் எட்டணுக் கொடுக்கிறேன்னு என்னேடே பேசிட்டு, இப்போ பாருங்க சாமி கொடுக்க மாட் டேங்கருன். ஆம்பளையைப் பாரு. தூ! என்று வாயிலிருந்து எச்சில் தெறிக்க அந்த மனிதன் பக் கம் பார்த்துக் கூவினுள். அதற்கு மேல் அவள் பேசியதை யெல்லாம்..... என் கை கூசுகிறது.

அவள் என்னுடைய ஒரு தொழில் சகோதரி. ஆம்; ஒரு வேசி தான்!

நான் ஒரு மாளிகையில் வீணை முதலிய ஆடம் பரங்களுடன் தொழில் நடத்துகிறேன். செல்வ வந்தர்கள், 'மைனர்கள்' தாமாக என்னைத் தேடி வந்து செல்வத்தைக் கொட்டிக் கொடுத்துச் சுகத் தைத் தேட முயலுகிருர்கள். அவள் அங்கே அந் தக் குறுகிய சந்தில் ஒரு திண்ணையின் மறைவில் நின்று உயிரைப் பிடித்து நிறுத்த முயலுகிருள். அவளைத் தேடி வருகிறவர்கள் அவளுக்குரிய, பேசிய கூலியைக் கூடக் கொடுக்காமல் ஏமாற்றி விட்டுப் போய்விட முயலுகிருர்கள்...''

இசை வாணி வனஜாவின் நெஞ்சம் எத்துணை விசாலமானது! நேர்மையானது! உண்மையும், மனிதமும் அந்த உள்ளத்தில் எவ்வளவு சிறப்பாக ஒளிர்கின்றன!

காரிலிருந்த வனஜாவின் இதயம், ஒரு தொழில் சகோதரியின் நிலைக்கு இரங்கிய வேளை யில்-மைனர் அப்பெண்ஞல் குற்றம் சாட்டப்பட் டவனை மிரட்டுகிருர். 'சீ நாயே! அவள் பணத் தைக் கொடு' என்று அதட்டுகிருர்

'அதற்குள் கூட்டத்தின் மறு கோடியிலிருந்து ஒரு குரல் 'போலீஸ்காரங்க வராங்க' என்றது. அவ்வளவுதான், அந்தப் பெண்ஞல் குற்றம் சாட் டப்பட்டவன் ஒருநாணயத்தை அவளிடம்எறிந்து விட்டு வேகமாக நழுவினுன். அவளும் அவசர அவசரமாக அந்த நாணயத்தைப் பொறுக்கிக் கொண்டு மறுபுறம் ஓடினுள். கூட்டத்திலிருந்த மற்றவர்கள் அவ்வளவு அவசரம் காட்டாமல் கலைந்து பிரிந்தார்கள்.

அவர் வெற்றி நடை போட்டுக்கொண்டு காருக்குத் திரும்பினுர். காரை அவர் இயக்கிய சமயம் எதிரிலிருந்து வந்த இரண்டு போலீஸ் காரர்கள் அவரை அணுகி, 'என்ன சார் அது?' என்று கேட்டார்கள்.

அவர், 'வேறே என்ன? சோதாப் பயல்கள். இந்த விபசாரி நாய்களை எல்லாம் பிடித்துப் புளி யம் விளாறினுல் அடித்து ஊரை விட்டு ஓட்ட வேண்டும்' என்று பொதுப்படையாகச் சொல்லி

விட்டுக் காரை ஓட்டினர்.

வீட்டிற்கு வந்த மைனர், மதுவைப் பருகி விட்டு, 'வனி! வீணையை எடுத்து அந்தக் கீர்த்தனத்தை முழுவதும் பாடு. சைத்தான்கள்! மனசு என்னவோ போல ஆகிவிட்டது' என்கிருர்.

முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு வீணையை எடுத்துச் சுருதி மீட்டினுள் வனஜா. 'வீணையின் இனிய ஒலி அப்போது என் உள்ளத்தைத் தொடவில்லே. ஏதோ ஒரு பெரிய பாறை எழுந்து நின்று கொண்டது போல் இருந்தது. இயந்திரம்போல் விரல்கள் ஸ்வரங்களே அளந்துவிட்டன. கிராமபோன் இசைத் தட்டைப் போலத் தொண்டை பாடியது. அவ்வளவுதான். எனக்கும் அந்த இசைக்கும் எவ்வித ஒட்டுதலும் ஏற்படவே யில்லே.

'மணி இரண்டடித்தது. என் முகத்தில் அதே புன்னகை, மங்காமல், மாருமல் விளேயாடிக் கொண்டிருந்தது. 'அடி ராட்சசி!' என்று நானே சொல்லிக் கொண்டேன்.

'தூங்கலாமா?' என்ருர். அவரைச் சயனத்தில் விட்டுவிட்டு ஏதோ அவசிய ஜோலிகளேக் கவனிப்பது போல அங்குமிங்கும் போய் வந்து கொண்டிருந்தேன், சற்று நேரம்.

அரை நாழிகை கழித்து அவர் பக்கம் திரும்பிப்பார்த்தேன். அவர் கண்ணயர்ந்து விட்டார். அதுவரை ரொம்பச் சிரமத்துடன் ஒரு சித்திரவதையை அனுபவிப்பவள் போலத் துடித்துக் கொண்டிருந்தவள் விடுதலேப் பெருமூச்செறிந்தேன். என் உள்ளம் எரிமலே போலக் கொதித்துக் கொண்டிருந்தது. என்னல் அந்தத் துன்பத்தைத் தாங்க இயலவில்லே. வீட்டிற்குள்ளிருப்பது மூச்சை அடைப்பது போலிருந்தது.'

வனஜாவின் மேற்கண்ட 'வாக்குமூல'த்தைப் படிக்கும்போது அவள் கார்னிவலுக்குப் போகு முன் கூறிய சொற்கள் நினைவுக்கு வருகின்றன.

'என் எஜமானர் சந்தோஷம் தானே என் இலட்சியம்! அவருடைய 'நான்' எவ்வளவுக்கெவ்வளவு திருப்தி அடைகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு எனக்குத்தானே லாபம்!'

ஓ! முன்னிரவு வனஜாவுக்கும் பின்னிரவு வனஜாவுக்கும் எவ்வளவு வித்தியாசம்! சுமார் எட்டுமணி நேரத்திற்குள் ஒரு மனித இருதயத்தில் எவ்வளவு மாற்றம் ஏற்பட்டுவிடுகிறது! முன்னிரவில் ஒரு அடிமையைப் போன்று நடந்து கொண்ட வனஜா, இப்போது தன்மானம் கொந்தளிக்கும், அடிமைத்தனத்திலிருந்து விடுபடத் துடிக்கும் ஒரு மனச்சாட்சியுள்ள பெண்மணியாக, சுதந்திரம் விரும்பும் ஒரு மங்கை நல்லாளாக உருவெடுத்து விட்டாள்! 'விபசாரி நாய்களே யெல்லாம் புளியம் விளாறினல் அடித்து ஊரைவிட்டு ஓட்டவேண்டும்' என்று மாய்மாலம் பேசிய மைனருடன் வாழ்வது, இனி அவளுக்குச் சித்திரவதை தானே ?

'கார்னிவல்' அநுபவத்தால் பயங்கர சித்திரவதையை ஏற்று எரிமலேபோலக் கொதிக்கும் உள்ளத்துடன், விடுதலேப் பெருமூச்செறியும் வனஜா இறுதியாக என்ன செய்கிருள்? அவளேச் சுற்றி நிகழ்வது என்ன ? அவ்விரவில் அவள் நெஞ்சம் அமைதி காண்கிறதா? இல்லே! இல்லே!......

'கால் மெட்டிகள் ஓசையிடாதபடி மெல்ல நடந்து முன்புறத் தாழ்வாரத்திற்குப் போய் நின்றேன். என்னே மீறிக் கண்கள் ஆகாயத்தின் புறம் திரும்பின. நிர்மலமான வான வீதியில் மினுமினுத்துக் கொண்டிருந்த நட்சத்திரக் கூட்டங்களுடன் என் கண்கள் பேசின. என் நெஞ்சம் அவற்றிடம் எதையோ கேட்டுப் பதிலே எதிர் பார்த்தது போலத் தவித்தது.'

வனஜா வானவீதியில் மின்னும் நட்சத்திரங்களுடன் அந்த நள்ளிரவில் என்ன கேள்வி கேட்டிருப்பாள்?

இவ்வுலகில் யார் முரடர்கள்? யார் சோதாக்கள்? இவ்வுலகின் அமைதியைக் குலேப்பவர்கள் யார்? நியாயத்தை அழிப்பவர்கள் யார்? அபசுரங்களேயும், ஓலங்களேயும் உண்டாக்குகிறவர்கள் யார்? பதட்ட நிலேயை விளேவிக்கிறவர்கள் யார்? தங்கள் தவறுகளே உணர்ந்து திருந்தாதவர்கள் யார்? பணப் பெருமையை மோட்டார் குழாயொலியாக மாற்றிச் சாதாரண ஜனங்களின் காதருகில் ஊதுகிறவர்களா? விதவிதமாக உடையணிந்து, ஜோ ஜோ வென்ற இரைச்சலுடன் இந்த உலகையே ஒரு வேடிக்கைச் சந்தையாக, விபரீத பூமியாக மாற்றுகிறவர்களா? இப்படித்தான் வனஜாவின் தவிக்கும் உள்ளம் துடித்திருக்க முடியும்...

எரிமலே நெஞ்சோடு 'நட்சத்திரக் குழந்தைக'ளுடன் பேசிப் பார்த்துப் பதில் பெருத வனஜாவுக்கு, யதார்த்த வாழ்க்கை ஒரு பச்சையான பதில் தருகிறது!

வனஜா கீழே வீதிப் பக்கம் குனிந்து பார்க்கிருள். அதோ அந்த மூலேயில், தெரு முடியுமிடத்தில் வீதி விளக்கினடியில் அவள் பார்வை லயிக்கிறது.

வனஜா அங்கே கண்டது என்ன ?

'என் உடல் ஏன் அப்படிக் குலுங்கியது? அங்கே நான் கண்ட காட்சி என் நாவில் அவ்வளவு கசப்பை ஏன் எழுப்பியது?

'அங்கே அந்தத் தெரு விளக்கடியில் அந்தப் பெண்—ஆமாம், வரும் வழியில் அந்தச் சந்தில் வயிற்றுப் பிழைப்புக்காக நின்றிருந்ததாகச்சொன்ளுளே அதே பெண்—நின்றிருந்தாள். அவளது கூந்தல் சீர்படுத்தப்பட்டிருந்தது. முகத்தில் அவள் புதிதாக அப்பியிருந்த மாவு பளிச்சென்று தெரிந்தது. அவ்வளவு தூரத்தில் இருந்தும் அவள் அணிந்திருந்த பழைய பூச்செண்டு ஒய்யாரம் காட்டியது. நான் முதலில் பார்த்தபோது அவள் தனியாகத்தான் நின்றிருந்தாள். அடுத்த நிமிஷம் யாரோ ஒருவன் அவளிடம் வந்துநின்றுபேசினன். அவள் கையை நீட்டினுள் வெள்ளி நாணயங்கள் இரண்டு மோதிய கலீரென்ற ஒலி என் காதுகளுக்கு எட்டியது'

வயிற்றுப்பிழைப்புக்காக ஒரு இளம்பெண், நள்ளிரவில், வீதி விளக்கினடியில், சோரம் போகும் காட்சி, நீதி உள்ளம் படைத்தவர்களின் நெஞ்சில், சமுதாயத்தின் இழிநிலே குறித்துக் கசப்பை ஏற்படுத்தவே செய்யும். எனவே, வனஜாவின் நாவில் கசப்பு உண்டானதில் வியப்பில்லே.

அவளது உடம்பு அதிர்ந்ததில் ஆச்சரிய மில்லை. வனஜாவைப் போன்ற வீணையோகினிகளுக்கு, இசைத் தபஸ்வினிகளுக்கு, அருள் நெஞ்சம் அமைந்ததுவே ஆச்சரியம்!...

வெளியிலிருந்து கிட்டிய கசப்பும், அதிர்ச்சியும் போதாமல், உள்ளிலிருந்தும் மிகமோசமாக அவை அவளைத் தாக்குகின்றன! எல்லாவற்றிலும் மிகக் கொடுமை அதுதான்!

அவள் தன் கதையை இவ்வாறு முடிக்கிறாள்:-

'உள்ளே அவர் உறக்கத்தில் புரண்டபோது விழித்துக்கொண்டு விட்டார் போலிருக்கிறது.

'வனீ!' என்று கூப்பிட்டார்.

'இதோ வந்தேன்' என்று பதில் சொல்லித் திரும்பினேன்.

ஆனால், ஐயோ! அந்தச் சொல்லில் இருந்த கசப்பு! அவருடைய மோக வெறியின் உச்ச ஸ்நாயியைக் காட்டும் ஸ்வரஸ்தானமான அந்தச் சொல்லிலிருந்த அந்தக் கசப்பை நான் எப்படிச் சொற்களால் காட்டமுடியும் ?

இருபது வருஷமாகியும் அன்று என் நெஞ்சில் நிறைந்த அந்தக் கசப்பு இன்னும் மாறவில்லையே!' இவ்வாறு வனஜாவின் சோகத்துடன் நிறைவுறுகிறது பி எஸ். ராமையாவின் 'கார்னிவல்' என்னும் தலைசிறந்த கலைப் படைப்பு.

முன்னிரவில் 'வனீ!'என்ற சொல்லில் இருந்த இனிப்பு, பின்னிரவில் ஏன் வனஜாவுக்குக் கசப்பாக மாறுகிறது ? .....

இதற்காக நான் மைனரைக் குற்றம் சொல்ல மாட்டேன்! அவர் துவக்கத்திலிருந்து இறுதிவரை காரியவாதியாகத் தான், மோக வெறியனாகத் தான், இருந்து வந்திருக்கிறார்! 'மைனர் விளையாட்டு' நன்கு விளையாடுபவராகத் தான் இருந்து வந்திருக்கிறார்! 'வனீ' தான் அவரது கைப்பாவையாக, படுக்கை அறைப் பதுமையாக இதுவரை நடந்து வந்திருக்கிறாள்!......

ஆனால், புதிய வாழ்க்கை அநுபவங்கள் அவளைத்தாக்கும் போது. அந்தப் பதினெட்டு வயதுப் பணக்காரத் தாசியின் உள்ளத்திலும், புதிய உணர்ச்சிகள், புதிய சிந்தனைகள் கொழுந்துவிட்டெறியத் துவங்குகின்றன. ஆன்ம விசாரம் முளைக்கிறது....

சமூதாயத்தின் அடித்தளத்தில் உழல்பவர்களின் கூச்சலுக்கும்,இரைச்சலுக்கும் நியாயமான காரணம் இருக்கிறது; அவசியம் இருக்கிறது. வாழ்க்கையில் வஞ்சிக்கப்பட்டவர்களும், ஏமாற்றப்பட்டவர்களும், அடக்கி ஒடுக்கப்பெற்றவர்களும் ஓலமிடுவதுடன் உரிமைக்காகவும் போராடுவார்கள்.

ஆனால், பணமும், பகட்டும், பவிசும் பெற்றவர்கள் வேண்டுமென்றே இரைகிறார்கள்; அ...சுரங்களை உண்டாக்குகிறார்கள், சமுதாய வாழ்வில் ரொம்பவும் கர்ண கடூரமாக மொழிவதும், அதனிலும் கடூரமான ஸ்வரத்தில் கூச்சலை எழுப்புவதும் அவர்கள்தான்! வாழ்க்கைச் சங்கீதத்தையே குலைத்து நொறுக்கிவிட்டு, வெற்றிப் போதையில் மிதப்பதும் அவர்கள்தான்; வீண் பெருமையும் திமிரும் கொண்டு திரிவதும் அவர்கள் தான். இத்தகைய போதம் வனஜாவுக்கு இருந்து வருவதால் தான், அவளது நெஞ்சில் நெடுங்காலமாகக் கசப்பு நிலவுகிறது போலும்!......

என்னைப் பொறுத்தவரையில், வனஜாக்களின் உள்ளத்தில்.தாய்க்குலத்தின் நெஞ்சில் இத்தகைய கசப்பும் கைப்பும் பல்லூழி காலம் நின்று நிலவுவதே நல்லது! புதிய சமுதாய அமைப்புக்கு இது தேவை என்பதே என் நம்பிக்கை !

பி. எஸ். ராமையாவின் 'கார்னிவ'லைப் பற்றி மிக விரிவாகவே எழுதியிருக்கிறேன். இதில் எதையும் நான் அலசி ஆராயவில்லை. இக்கதையைப் பற்றி இவ்வளவு எழுதினால்தான் என் மனம் நிறையுமென்று தோன்றியது. ஆகவே என் காட்சியையும், கருத்துக்களையும் வரைந்து தள்ளியிருக்கிறேன்!.. ...

பி. எஸ் ராமையாவின் 'கார்னிவல்,' வீணை இசையில் தன்னை மறக்கும் நிலைபெற்ற ஒரு தாசியை ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளை ஓர் இரவில் ஆட்டிவைக்கும் கதை.வேறுவிதமாகச் சொன்னால் ஒரு பணக்காரமைனருக்கு ஆட்பட முயன்று அதில் தோல்விகண்ட மனச்சாட்சியுள்ள ஒருநாத உபாஸகியின் வெதும்பல் இது.

'கார்னிவல்' அற்புதமான உருவமும் உள்ளடக்கமும் வாய்ந்த ஒரு கலாசாதனை.

தமிழகத்தில் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே டால்ஸ்டாய் செஹாவ், மாக்ஸிம் கார்க்கி ஆகியோருக்கு நிகராகக் கதை எழுதவல்லவர்கள் தோன்றிவிட்டார்கள். அத்தகைய மேதாவிலாசம் படைத்த கலைஞர்களில் பி. எஸ். ராமையாவும் ஒருவர் என்பதில் எனக்கு ஐயமில்லை.

ராமையாவின் 'கார்னிவ'லில் எதார்த்த எழிலும், காவியநயமும், சிறந்த சிந்தனையும், மனோதர்மமும் சுடர் விடுகின்றன

மகாத்மாஜி தலைமை தாங்கி அறப்போர் நடத்திய சத்திய சோதனைகள் பல நிகழ்த்திய, மகத்தான சகாப்தத்தில் (1936-ல்) பிறந்துள்ளது இக்கதை! எனவே, இக்கதையில் ஒரு மெல்லிய அதர்ம எதிர்ப்பைக் காண்கிறோம்; வனஜா ஒரு சத்யாக்கிரகியாக மாறுவதைப் பார்க்கிறோம் !

டால்ஸ்டாயின் அன்னாகரினினாவைப் போல், ராமையாவின் வனஜாவும் தமிழ்ச் சிறுகதையில் எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு பாத்திரம்; எத்தனை ஆண்டுகள் ஆனாலும், என் நெஞ்சைவிட்டு நீங்காத கலை வடிவம் !

பி. எஸ். ராமையாவின் 'கார்னிவல்' புதுமை, தனித்தன்மை, பூரணத்துவம் ஆகிய உன்னதக் கலைப் பண்புகள் செறிந்த ஓர் உணர்ச்சி ஓவியம்; ஆயிரக் கணக்கான தமிழ்ச் சிறுகதைகளில் ஒரு அபூர்வ ரத்தினம் !

# இலக்கியத்தில் தரம்

## நீல. பத்மநாபன்

கேரளநாட்டின் இலக்கிய ஜாம்பவான்களுக்கிடையில் காரசாரமாக விவாதிக்கப் பட்டுக்கொண்டிருக்கும் ஒரு 'அக்கப்போரை' அலசி, அதன் மூலம் நம் தமிழ் இலக்கியச் சிந்தனைக்கு ஏதாவது லாபம் உண்டா என்று பார்ப்பதுதான் இக்கட்டுரையின் உத்தேசம்.

**சம்பவம் இதுதான் :**

கல்கத்தா பாரதீய ஞானபீடத்தினர் பல்வேறு இந்திய மொழிகளில் வெளிவந்திருக்கும் புத்தகங்கள் எல்லாவற்றிலும் வைத்து முதன்மையான புத்தகத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசு வழங்க முடிவெடுத்து, பாரதத்தின் எல்லாப் பிராந்திய மொழிகளிலும் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புமாறு அந்தந்தமொழிசாஹித்ய அக்காடமிகளைக் கேட்டிருந்தது. இங்கே கேரள சாஹித்ய அக்காடமி மலையாள மொழியில் பரிசுக்கு லாயக்கான நூல் ஒன்றுகூட கிடையாது என்று முடிவெடுத்தது. இதில் வெகுண்டெழுந்த 'மாத்ருபூமி' அகாடமியின் இயலாமையை எள்ளி நகையாடி ஒரு தலையங்கம் தீட்டியது. இதற்கு அகாடமித் தலைவர் புத்தேழத்து — ராமன் மேனோன், 'அப்போதைக் கப்போது எழுதிக்குவித்த குப்பைக் கூளங்களையெல்லாம் திணித்து உருவாக்கிய சிறுகதைத் தொகுப்புக்களும் எந்த சாரமும் இல்லாத கிராமத்து மோர்த் தண்ணீரைப் ('ஸம்பாரம்')போன்ற நாவல்களும் உன்னதமான இலக்கியச் சிருஷ்டி ஆகுமா? என்று ஆக்ரோஷமாகக் கேள்விக்கணை தொடுத்தார். 'ஓடையில் நின்னு', (சாக்கடையிலிருந்து) 'ரெளடி'. 'ஒரு சுந்தரியின் ஆத்மகதா' முதலிய ஜனரஞ்சகமான நாவல்களும், ஏராளமான சிறுகதைகள், நாடகங்கள் எழுதியதோடு, இலக்கிய விமர்சகர்கள் என்றாலேஎழுத்தாளர்களின் 'உச்சிஷ்டத்தை' (எச்சிலை) நம்பி வயிற்றுப் பிழைப்பு நடத்தும் நீசர்கள் என்பது வரை இளக்காரமாக பத்திரிகைகளில் அடிக்கடி எழுதுவதுடன், உலகில் சகலவிதமான பேர்களையும் தன் 'எதிர்ப்பில்' (ஒரு சுயசரிதை) எதிர்க்கும் (!) கேசவதேவ் அகாடமித் தலைவருக்கு வீறோடுமறுப்புவிடுத்தார் (சமீபத்தில் கேசவதேவ் எழுதிய 'அயல்கார்' என்ற நாவலுக்கு மத்திய சாஹித்ய அகாடமி பரிசு கிடைத்தது என்பதையும் இங்கே குறிப்பிடவேண்டும்).

'இலக்கியச் சிருஷ்டிக் கர்த்தாக்களான தகழி, ஜோசப் முண்டசேரிமுதலிய அகாடமிச் செயற்குழு அங்கத்தினர்கள் கூட பங்கெடுத்த ஒருசெயற்குழு கூட்டம் தானு இந்த முடிவெடுத்தது? அவர்கள் இதற்கு மக்களுக்கு பகிரங்கமாக பதில் சொல்லட்டும்' என்று கேசவதேவ் ஒரு அறிக்கை விட்டதோடு ஒய்ந்துவிடவில்லை. 'அப்போதைக்கப்போது இலக்கியக் கர்த்தாக்களால் உருவாக்கப்படுவதுதான் இலக்கியம். இலக்கியச் சிருஷ்டி என்றால் ஒரே மூச்சில் எழுதுவதல்ல' என்று வால்மீகி, ஹோமர், ஷேக்ஸ்பியர் முதலிய மகா இலக்கிய சாம்ராட்டுக்களைச் சுட்டிக்காட்டி குறிப்பிட்டதோடு, தம்போன்ற எழுத்தாளர்களின் படைப்புக்கள் இஞ்சி, எலுமிச்சம் பழச்சாறு முதலியவை பக்குவமாகச் சேர்த்து தயாரிக்கும் மோர்—(சம்பாரம்)தான் என்றும், அதையே ஜீரணித்துக்கொள்ள முடியாதவர்கள் கட்டைத் தயிரை எப்படி 'வெட்டி விழுங்குவார்கள்;' என்றும் ஆணித்தரமாக ரோஷக்குரல் எழுப்பினுர்.

புத்தேழத்து ராமன் மேனோன் வைக்கோல் போர் நாயாக நடந்து கொண்டார் என்றோ, இல்லை, கேசவதேவ் ஒருலட்சம் தனக்கு நஷ்டமான வயற்றெரிச்சலைக் கொட்டித் தீர்க்கிறுர் என்றோ நமக்கு அபிப்பிராய மில்லை. நமக்கு சம்பந்தமில்லாத விஷயம் கூட! ஆனுல் பரிசு வழங்க பரிசோதனைக்காக தேர்ந்தெடுக்கும் போது உரியநீதி வழங்கும் ஏற்பாடு இல்லை என்பது கண்கூடு, நம் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் பார்த்தாலும். உதாரணத்திற்கு மத்திய சாஹித்ய அகாடமி ஆண்டுதோறும் பரிசு வழங்கும் புத்தகங்களின் ஒரு பட்டியலை பரிசோதித்துப் பார்க்கிற எவருக்கும் புலப்படும். மட்டுமல்ல, பல தடவை பல அனைத்திந்தியா இலக்கியப் போட்டிகளுக்கு பரிசு வழங்க யோக்கியதை உள்ள புத்தகங்கள் எதுவும் தமிழில் இல்லை என்று 'சர்ட்டிப்பிக்கட்' தரமாக வழங்கிய பெருமையும் தமிழக இலக்கிய மன்னர்களுக்கு உண்டு என்பதும் யாவருக்கும் தெரிந்ததே ...!

கேரளத்து இந்த வாதப் பிரதிவாத நிகழ்ச்சியை இங்கே ஏன் குறித்தேன் என்றுல் முன்னுல் நான் பிரஸ்தாபித்தவாறு இதன் அடிப்படையில், இலக்கியம் என்பது 'மோர்த்தண்ணியா இல்லை 'கட்டைத் தயிரா' என்று அறிய, பொதுவாக ஆராய்ந்து, ஏதாவது நமக்குத் தேறுகிறதா என்று பார்ப்போம் என்பதனுல் தான்......!

கலையென்றுல்...?

கலையில் பயனுள்ள கலையும், அழகுக்கலையும் உண்டு. பயனுள்ள கலையில் அழகு மயக்கத்துடன், கலைஞனுக்கு பலனும்— ஆம் லௌகிகமாக ஆதாயம், அதாவது நிதிலாபமும் கிடைக்க வழியுண்டு என்பது ஆராய்ச்சியாளர்கள் துணிவு. அழகுக் கலையில் அப்படி எதிர்பார்க்க முடியாது தான்! ஆனுல் கலையை ஜீவனேபாயமாக வைத்திராத மாமன்னர் காலங்களில் அதுசரி...! எனினும் இன்றும் எவ்வித பிரதிபலனும் கருதாத வெறும் அழகுக்காக படைக்கப்படும் கலைகளும் இருக்கத்தான் செய்கின்றன!

'கலை கலைக்காக' (Art for art's sake) என்ற தத்துவம் தான் அழகுக் கலையை உருவாக்கும் கலைஞர்களுக்கு அந்த காலத்தில் ஊக்கம் அளித்ததே ஆயினும் இன்று யாரும் அப்படி கலை உற்பத்தி செய்வதோடு மட்டும் ஓய்ந்து போவதில்லை. அந்த கலை மக்களுக்காக என்ற வாதம் நடைமுறையில் வந்துவிட்ட காலம் இது! இதை கலை கலைச்காகத்தான், மக்களுக்காக அல்ல என்று மறுப்பவர்களும் தனது கலாசிருஷ்டியை மக்களில் ஒரே ஒருவனாவது—தன்னைத் தவிரப் பார்த்து அதன் பயனை அடையவேண்டும் என்று எண்ணாமலிருக்க மாட்டான். அப்படியென்றால் இனியொரு விதத்தில் 'கலை மக்களுக்காகத்தான்' என்பதை அவனும் ஒப்புக்கொள்கிறான் என்பது அர்த்தம்.

கலையிலிருந்து இலக்கியக் கலைக்கு......

இனி நமது இலக்கியக் கலைக்கு வருவோம். இலக்கியப் படைப்பு மட்டுமல்ல, உலகில் உருவாக்கப்படும் 'குண்டூசி முதல் பழச்சாறு வரை' சகலமான பொருட்களும் தரமானவை( கட்டைத் தயிர்'), தரமில்லாதவை ( 'மோர்த் தண்ணீர்') என்று இரண்டு வகையாக கூறுபோடலாம்.

தரமில்லாதவை

முதலில் வெறும் வியாபார நோக்கில் வெளியிடப்படும் 'தரமில்லாத இலக்கியப் படைப்புக்களை' எடுத்துக் கொள்வோம்.

வியாபார நோக்கில் வெளியிடப்படும் தரமில்லாத இலக்கியப் படைப்புக்களைப் பற்றி அலசும் முன் வியாபார நோக்கில் உற்பத்தியாகும் வர்த்தகப் பொருட்களைப்பற்றி பொதுவாக, அவசரம் அவசரமாக சிறிது சிந்தித்து விடுவோம்.

வர்த்தகப் பொருள் உற்பத்தியில்

எந்தப் பொருளும் உற்பத்தியாகும் முன் அதன் வியாபார சாத்தியக் கூறுகளைப் (Marketing means) பற்றித்தான் எடைபோட வேண்டியது முக்கியம் என்பது யாவருக்குமே தெரிந்த உண்மை. உதாரணத்திற்கு பேனாவை எடுத்துக் கொள்வோமே... அதை உற்பத்தி செய்யும் ஒரு சிறு தொழில் உடமையை (Small Scale Industrialist) பார்ப்போம். பேனாவை உற்பத்தி செய்யும் முன் அதன் வியாபாரத் தகுதி எப்படி என்று ஆராய்கிறான். இன்று கிடைக்கும் பேனாக்கள் என்னென்ன, அதன் தரம். திறம், விலை, விற்பனை முதலிய எல்லாவற்றையும் பரிசோதித்து விட்டு தனது உற்பத்திக்கு ஏனைய பேனாக்களைவிட இருக்கவேண்டிய கவர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கிறான். உற்பத்தியைப் பற்றிய ஏனைய விஷயங்களைப் பற்றியெல்லாம் முடிவெடுக்கும் முன்னாலேயே, தீவிரமாக ஆராய்ந்து திருப்தியாக வேண்டியது, பொருளாதார சாஸ்திரப்படிப் பார்த்தாலும் இந்த விற்பனை (Marketing) தான். விற்பனை என்ற ஒன்று இல்லாவிடில் உற்பத்தியே தேவையற்றதுதானே...தனிப்பட்ட அந்த மனிதனுக்கும் (Enterpreneur) நஷ்டம், அதனால் நாட்டின் பொது நிதிக்கும் நஷ்டம்.

தரமில்லா இலக்கியம்

இனிதரமில்லா இலக்கியத்திற்கு வருவோம். மேலே சொன்ன வர்த்தகப் பொருள் உற்பத்தியில் ஒரு 'பொருளாக' இலக்கியத்தையும் நினைக்கையில் தரம் தாழ்வதில் வியப்பதற்கில்லை என்பது மட்டுமல்ல, அதே நியதிப்படி அதிக விற்பனை ஒன்றுமட்டுமே பார்க்கப்படுகிறது.

மக்களுக்காகப் படைக்கப்படும் கலை, — இங்கே இலக்கியம் அந்த மக்களை எவ்வளவு தூரம் அதிகமாக அடைகிறதோ, விற்பனை ஆகிறதோ அவ்வளவு தூரம் வெற்றி என்று இந்த 'இலக்கிய வர்த்தகர்கள்' நினைக்கிறார்கள். இதற்கு 'கலை மக்களுக்காக' என்ற சொல்லும் இவர்களுக்கு துணைநிற்கிறது. இதனால் மக்கள் மனதைக் கவர முயற்சிக்கிறார்கள். ஒரு நாட்டின் ஜனசமூகத்தில் நுண்ணிய மதியும், தீவிரக் கருத்துக்களை ரசித்து ஜீரணித்துக்கொள்ள வலுவும் உள்ள மனிதர்கள், லேசான கருத்துக்களைப் புரிந்துகொள்ளும் வலு உள்ளவர்களைவிட எத்தனையோ மடங்கு குறைந்துதான் இருப்பார்கள். ஆனால் 'பிஸினஸை விஸ்தரிக்கும் எண்ணமுடைய, விஸ்தரித்து பொருளீட்ட எண்ணமுடைய எந்த வர்த்தகனும் விரிவான மார்க்கெட்டைத்தான் நாடுவான். ஆதலால் பெருவாரி மக்களின் ரசனைக்கு உகந்த படைப்புக்களை உருவாக்கத்தான் இம்மாதிரி எழுத்தாளர்களும், அந்த எழுத்துக்களை பிரசுரிக்கும் பிரசுரகர்த்தாக்களும் அதிகமாக முன் வருகிறார்கள். ஆதலால் 'இந்த குறிப்பிட்ட புத்தகம் 'பத்துப் பதிப்புக்கள் போடப்பட்டன' லட்சக்கணக்கான பிரதிகள் செலவழிந்தன' என்றெல்லாம் அறிகையில் அதன் ஆசிரியர் ஒரு தரமான இலக்கியக் கர்த்தா ஆகிவிட்டான், அது அவனுக்குக் கிடைத்த இமாலய வெற்றி என்றெல்லாம் கூறிவிடமுடியாது.

தரமில்லாதவை. தரமுள்ளவை என்ற இரண்டில் பொதுவாக தரமில்லாதவை விலையிலும் கருத்திலும் மலிவாகவும், தரமானவை உள்ளடக்கத்திலும் விலையிலும் கூடுதலாகவும் இருக்குமேயாயினும் அது ஒரு பொது விதி அல்ல. தரமும். விலை மலிவும் சேர்ந்துஇருப்பினும் முன்னால் குறிப்பிட்டவாறு மக்களின் க்ஷணப்பித்தத்தில் ஜனித்த மித்யமான ஒரு அனுபூதிக்கு ஆளாகி, அட்டி அட்டியாக விற்றழிந்து போகும் தரமோ மலிவோ இல்லாத சாமான்களைப் பார்க்கிறோம் அல்லவா? ஆதலால்தான் சொன்னேன், அதிகமாக மக்கள் வாங்கினார்கள், படித்தார்கள் என்பதால் மட்டும் அது தரமானதுதான் என்று இலக்கியத்தைப் பொறுத்த வரையில் சொல்லிவிட முடியாது.

சரி. இனி இந்த தரமில்லாத புத்தகங்களையே கொஞ்சம் விசாலமாகப் பார்ப்போம். நாலு வகையாக பிரிக்கலாம்.

**தரமில்லாத புத்தகங்கள் — முதலாவதாக**

விற்பனைக்காக, இலாப நோக்குக்காக மட்டும் தரம் தாழ்ந்தவை. எல்லா வாசகர்களுடைய டபபோத மனங்களிலும், நாகரீகத்தின் போர்வையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் சில உணர்ச்சிகள்—அதாவது பயம், கோபம் விரக்தி, பொறுமை, மாமிச தாகம், கோழைத்தனம், இத்யாதி... இத்யாதி உணர்ச்சிகளை அப்பட்டமாக சுண்டி இழுத்து ஒருவித மோகக் கிறுகிறுக்கத்தை ஏற்படுத்தும் துப்பறியும் கதைப் புத்தகங்கள், மர்மக் கதைகள், இளம் பெண்களின் உடற்கட்டை அசிங்கமான ரீதியில் அட்டைப்படம் போட்டுக் காட்டி ஆவலைத் தூண்டும் புத்தகங்கள் முதலியவை. இந்த 'மார்க்கட் சரக்கை' உற்பத்திசெய்யும் எழுத்தாளர்கள் யாரும் தங்களை இலக்கிய வல்லுனர்களாக உரிமை பாராட்டுவது சாதாரணமாக கிடையாது. ஆனால் புஸ்தக மார்க்கெட்டை எடுத்துக் கொண்டால் அபாரமான லாபமும், பணச்செழிப்பும் வருவது இவர்களுக்குத் தான்.

**தரமில்லாத எழுத்தில் இரண்டாவதாக**

வீட்டில் பொழுது போகாது தவிக்கும் தமிழ் நாட்டு பெண்களின் பொழுது போக்குக்காக (பிரத்யேகமாக கூறவேண்டுமானால், காலையிலேயே சமையல் வேலையெல்லாம் முடித்து, வீட்டு ஆண்கள் பத்துமணிக்கெல்லாம் காரியாலயத்திற்கு செல்லும்போது மத்தியான டிபனுக்கு வேண்டியதையும் தயாரித்து கூடவே கையில் கொடுத்தனுப்பி விட்டால் பின் மாலை ஐந்து மணிக்கு அவர்கள் திரும்பவரும் வரையில் எந்த வேலையும் செய்வதற்கில்லாது, நேரத்தை எப்படிக் கொல்வது என்று பிரயாசைப் பட்டுக்கொண்டிருக்கும் பெண்களை உத்தேசித்து) எழுதப்படும் எழுத்துக்கள்...சிறுகதை, நாவல்கள் முதலியவை இதில் உட்படும். இளம் ஆண் பெண்களின் குறும்புத்தனங்கள், அங்கவர்ணனைகள், அந்தப் பெண்கள் செய்யும் விரும்பத்தகுந்த காதல் சேஷ்டைகள், பேச்சுக்கள், உண்மையான வாழ்வில் அனுபவிக்க முடியாத இனிய பிரேமைச் சுகங்கள், இவைகளை அடிப்படையாகக் கொண்டு பல கதாசிரியர்கள், கதாசிரியைகளால் புனைந்தெழுப்பப்படும் சிறுகதைகள், நாவல்கள்......

இவர்கள் தங்கள் எழுத்தை தரமில்லாதவை என்று யாராவது சொன்னால் சீறி விழுவார்கள். சான்றாக தங்கள் எழுத்தைப் புகழ்ந்து பல பெண் வாசகர்கள் அனுப்பிய கடிதங்களை காட்டுவார்கள். முதலில் குறிப்பிட்ட மர்மக்கதை, துப்பறியும் கதாசிரியர்கள் தான் தரமில்லா எழுத்துக்களை எழுதி தமிழக வாசகர்களை கெடுக்கிறார்கள் என்றும் சாதிப்பார்கள். இவர்கள் வியாபார நோக்கை மட்டும் கொண்டு தரம் தாழ்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இலக்கியப் படைப்பு என்றால், வாசகர்களுக்கு பிடிப்பதாக மட்டும் இருந்தால் விட்டால் போதுமானது பழைய பாட்டையில் போனாலும் பரவாயில்லை, அங்கே புதிய உத்திகளை பரீட்சார்த்தமாக கையாண்டு தோல்வி அடைவதைவிட பழையன பிரயோகித்தும் கிடைக்கிற வெற்றிதான் முக்கியம் என்று கருதி விடுகிறார்கள் இவர்கள். பத்திரிகை பலமும், பதிப்பக பலமும், ஏன், வாசகர் பலமும் இவர்களுக்கு சாதகமாக இருப்பதால் இவர்கள் குரலே எடுபட்டும் நிற்கிறது...! ஆதலால் இவர்களுடைய எழுத்து தரமில்லாதது என்று சொல்கிறவர்கள், நூற்றுக்கணக்கான இந்த எழுத்தாளர்களிடமிருந்து மட்டுமல்ல லட்சக்கணக்கான வாசகர்களிடமிருந்தும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் வலு உள்ளவர்களாக இருக்கவேண்டும். இதனால் 'தரம் இதுவல்ல' என்ற பலகீனமான குரல்கள் எடுபடுவதும் இல்லை, ஒரு வேளை காலக்கிரமத்தில் அவை அமுங்கிப் போய் அதன் மீது இவர்கள் வெற்றிக் கொடி நாட்டி விடுவார்களே ஆனாலும் ஆச்சரியப்பட எதுவும் இல்லை.

**இலக்கியத்தரமில்லா எழுத்தில் மூன்றுவதாக**

தமிழகத்து பழைய செல்லரித்த பாட்டுகளையே 'முதல் முடக்காக' வைத்துக் கொண்டு 'முறைப்படி' கற்ற தமிழை மட்டும் நம்பி கதா காலக்ஷேபம் செய்யும் கதைக்கட்டுரைகளும், நாவல்களும்! இவர்களைக்கேட்டால் முதலில்குறிப்பிட்ட மர்மக்கதை வீரர்களும் ஏன் இரண்டாவது குறிப்பிட்ட கதை நாவல் எழுத்துச் சாராரின் சிருஷ்டிகள்தான் தரமில்லாதவை, தங்களுடைய எழுத்துக்கள்தான் உண்மையான இலக்கியம் என்றும் ஆர்ப்பரிப்பார்கள்.

நாலாவதாக

தங்களை இலக்கிய உலகை உத்தாரணம் செய்ய கடவுளால் படைக்கப்பட்ட போலீஸ் படையாக எண்ணிக் கொண்டு அரைகுறை ஆங்கில விமர்சன அறிவை மட்டும் வைத்துக்கொண்டு வானத்திற்கு கீழே பூமிக்கு மேலே உள்ள எல்லா எழுத்தாளர்களையும் அவர்கள் தம் குறைகளை மட்டும் (மறந்து போய் கூட நிறைகளைப்பற்றிச் சொல்ல மாட்டார்கள்) விமரிசையாக விமர்சித்துக் கொண்டிருக்கும் விமர்சன எழுத்தாளர்கள். இரண்டாவதாக குறிப்பிட்ட தரமில்லா இலக்கியக் கர்த்தாக்களில் கூட பல திறமை மிக்கபேர்களும் 'இதுதான் உண்மையான-தரமான இலக்கியம்' என்ற மாயத் தோற்றத்தால் தூண்டப்பட்டு எழுதிக் கொண்டிருப்பவர்கள். இவர்களை விமர்சிக்கையில் இந்த விமர்சகர் குழாம் கொஞ்சம் தயைத்தாட்சண்யம் காட்டுவதோடு, சிருஷ்டிபூர்வமாகவும் நடந்து கொண்டிருந்தால் தரமிக்க எழுத்தை உருவாக்கும் பல எழுத்தாளர்கள் கூட தமிழகத்துக்கு கிட்டியிருக்கும் என்பது உறுதி. இதனால் நஷ்டமடைந்தது தமிழ் இலக்கிய உலகமே தவிர இந்த விமர்சகர்கள் அல்ல. அறிவு விளை

விக்கக் கூடிய எழுத்தை தரமான எழுத்தாக கணிக்க முடியுமா?

தரமுள்ள எழுத்துக்கள் எவை?

தரமுள்ள எழுத்தைப்பற்றி தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையிலும் அதிகமாக எழுத ஒன்றும் இல்லை. ஆனால் கைவிட்டு எண்ணி விடக் கூடிய எழுத்தாளர்கள் கொஞ்சம் பேர்கள் இன்று கனத்த எதிர்ப்பிலும் களத்தில் நின்று சமர் செய்யத்தான் செய்கிறார்கள்!

இவர்களால் படைக்கப்படும் எழுத்தில் முற்றிலும் மாறுபட்ட—கேட்டுக்கேட்டு அலுத்துப் போன பாணிகளும்,மையக்கருத்துக்களும் அறவே மாறிய, 'பளிச்' சென்று ஒரு தெளிவு புலப்படுகிறது. சிறுகதைகள், நாவல்களை எடுத்துக்கொண்டால் வெறும் தூய தமிழை மட்டும் கேட்கவில்லை. பேசுபவர்கள் வாயிலெல்லாம் கதாசிரியர் தான் கற்ற கல்விப்பெருக்கை ஒலிப்பெருக்காமல், அவரவர்களுக்கேற்ற, யதார்த்த மொழிகளை கொடுக்கிறார்கள். வெறும் சம்பவக் கோர்வைகளான சிறுகதைகளாக தரம் தாழ்த்தாமல் அதே சமயத்தில் வெறும் வாய்ப்பந்தலாக போரடிக்காமல் துல்லியமான வாழ்க்கைப் பிரவாகத்தின் துளிகளை கண்கூடாக தரிசிக்கிறோம்

நாவல்களை எடுத்துக்கொண்டாலும் சரி, சிறுகதைகளை எடுத்துக் கொண்டாலும்சரி, பரீட்சார்த்தமாக சோதனைகள், சிறிய அளவிலாவது செய்யப்படுகிறது. முற்றிலும் புதிய ஒரு பாதைக்குச் சென்று 'தோல்வி'யுற்று விட்டாலும் அதுவும் ஒரு விதத்தில் வெற்றி தானே.....!

தமிழ் நாட்டு பழமை இலக்கியங்களில் கிடைப்பதை எல்லாம் ஓஹோ... ஆஹா........ என்று தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடாமல், இன்னன்னவை இந்தந்த காரணங்களால் பாராட்டத்தகுந்தவை, இன்னன்னவை இந்தந்த காரணங்களால் மோசமானவை என்பதை நுண்ணிய முறையில் இனம்கண்டு கூறுவதோடு, அவை பற்றி விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து—தற்கால விமர்சன பாணியில் துழாவி, தேவைப்பட்டால் ஏனைய நாட்டு எழுத்துக்கள்கூட ஒப்பு நோக்கி வரையப்படும் சாரமான கட்டுரைகள், அதிகமாக இல்லாவிடினும், வெளிவருகிறது. தற்கால தமிழ் எழுத்தைப்பற்றி சிருஷ்டிபூர்வமான விமர்சனங்களைக் காண்கிறோம் உணர்ச்சித்தெறிப்புக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, இலக்கணத்தை விலக்கித்தள்ளி எழுதப்படும் புதுமைக் கவிதைகளை பார்க்கிறோம்

முடிவாக:-

புராதன காலத்தில் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, ஏனைய நாடுகளிலும் இலக்கியமென்றால், அதைச் சொல்லும் நடையில் தன் பாண்டியத்தை வெளிப்படுத்துவதும் வாசகர்களைக்குழப்புவதும் ஒருங்கே செய்ய வேண்டுமென்ற நோக்கில் எத்தனைக்கெத்தனை வழக்கொழிந்த சொற்களை புகுத்துவதுதான் பெரும்பான்மை கவிஞர்களின் 'வித்தை'யாக இருந்து வந்தது இப்போது காலம் மாறிவிட்டது. உலகமெங்குமே மொழி—நடைகள் முடிகிற அளவுக்கு குழப்பமின்றி தெளிந்த எளிமையில், இனிமையான சின்னஞ்சிறு பாணியில் இருக்க வேண்டு மென்ற கொள்கைக்கு அங்கீகாரம் கிடைத்து விட்டது அப்படியிருந்தும் 'கடபுட' வார்த்தைகளைப் போட்டு உருட்டி, பத்துப் பக்கங்கள்வரை ஒரே வாக்கியத்தை நீட்டி வாசகரைச் சலிப்படையச் செய்யும் 'இலக்கிய குண்டோதரர்'கள் தமிழிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் எழுத்தை இன்று தரமுள்ள எழுத்தாக நாம் கவனிப்பதில்லை.

ஆனால் அந்த மாதிரி எழுத்தை தரமில்லாதது என்று கேலி பேசும் அதே நேரத்தில், இன்று தரமுள்ள எழுத்தைப்படைக்க பிரயாசை எடுத்துக் கொண்டிருக்கும் தரமிக்க எழுத்தாளர்களில் சிலபேர்கள் சிறுகச்சிறுக நடையில் அல்ல, கருத்தில். கதையின் உள்ளடக்கத்தில் தீவிர வாசகர்களால் கூட இங்கே வாசகர்கள் என்று குறிப்பிடுவது முதலில் குறிப்பிட்ட தரமில்லாத எழுத்துக்களை விழுந்து விழுந்து வாசிக்கும் 'பொழுது போகாத,—வெறும் நுனிப்புல் மேயும் வாசகர்களை அல்ல) புரிந்து கொள்ள முடியாது வெறும் குழப்பத்தை மட்டும் மிஞ்சும் படியான எழுத்தை படைத்து விடுகிறார்கள். இதனால் இம்மாதிரி எழுதுபவர்களின் உள்ளத்தில் பீறிட்டு எழும் கருத்துக்களை செவ்வனே வாசிப்பவனால் உணர முடியாதது மட்டுமல்ல. உதாசீனம் செய்யும் அளவுக்கும் போய்விடுகிறது. ஏன் என்றால் தனக்குப் புரிந்து கொள்ளும் திராணி இல்லை என்றோ இன்னுரை கிரகிக்கும் அளவுக்கு தான்வளரவில்லையென்றோ தன் தலைவிதியை நொந்து கொண்டு இருளில் முழம் போட்டவாறு 'கர்மமே' என்று வாசித்து முடித்து விடும் வாசகர்களை இன்று காணமுடியாது.

உலகத்தில் என்னதான் உயர்ந்த மகத்தான தத்துவங்கள் ஆயினும் சரி, இல்லை வெறும் மலிந்த கருத்தா யினும்சரி, அதை எடுத்து ஆள்பவர்களின் சாமர்த்தியத்தைப் பொறுத்தது.புரியுமாறு சொல்வதும், புரிய மாட்டாமல் குழப்புவதும் கதையின் வளர்ச்சிக்காகத்தான் தத்துவமேயன்றி தத்துவ மேற்கோள்களுக்காக கதை அல்ல. அதற்காக சவிஸ்தாரமாக புராணவியாக்கியானம். செய்து கொண்டிருக்க வேண்டு மென்றல்ல பொருள். கதையின் ஓட்டத்தில் தெறித்துவிழும் மொத்த கதைப் போக்கின் ஊடே இழைபோடும் தத்துவ முத்துக்கள் அந்த எழுத்துச்சிருஷ்டியின் அழகுக்கு அழகூட்டும் நகையாக திகழ வேண்டும். மாறாக எழுத்தை நகைதாங்கும் சுமைதாங்கியாக தரம் தாழ்த்து விடலாகாது. இதைக்கூட உணர்ந்து நமது தரமிக்க 'இலக்கிய வித்தகர்கள்' தங்கள் எழுத்துக்களைப் படைப்பார்களேயானால் தமிழ் 'இலக்கிய வர்த்தகர்' களிடமிருந்து தமிழைக் காப்பாற்றிய பெருமையை அடைவார்கள் என்பது நிச்சயம்.

## கவிதையில் குழப்ப நயம்

(152ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் தலைவிக்கு இரண்டு குணங்களைக் கூறிவிட்டு தலைவனுக்கு இருக்கும் குணத்தையும்சொல்கிறார். இங்கு தலைவன் தணலாகத் தகித்துக் கொண்டிருக்கிறான். கரியாக அணைந்து கிடக்கிறான். முதல் கவிஞரைவிட இக்கவிஞர் ஒருபடி மேலே போகிறார். இவர் பெண்ணாகிய தண்ணீரை ஆணாகிய நெருப்பின் மீது ஊற்றிப் பார்த்துப் பிறகு மீண்டும் விழியாகிய பொறியால் கரியான ஆணை நெருப்பாக்கிக் காட்டுகிறார். முன்னதில் கவிதை தூண்டும் உணர்ச்சி மென்மையானது. இதில் கவிதை தூண்டும் உணர்ச்சி தீவிரப் படுத்தப்பட்டிருக்கிறது.

முதல் கவிதை காலம் காட்ட வில்லை. ஒரு உண்மையை நிதானமாகச் செய்தியாய்ச் சொல்கிறது. குழப்பம் இல்லாமல் மிகவும் தெளிவாக இருக்கிறது. இரண்டாம் கவிதை அப்படியில்லை. காலம் காட்டுகிறது. இறந்த காலத்தில் பேசப்பட்டிருக்கிறது. ஒருத்தியை முன்னிலைப் படுத்திப்பேசுகிறான் தலைவன். ஒருத்தியை ஸ்தூலமாக எதிரில் நிறுத்திக் கொள்ளாமல் மனதில் முன்னிலைப்படுத்திக் கொண்டிருக்கலாம். ஆனாலும் அவன் தன் நினைப்பை எதிராளியை முன்னிலைப்படுத்தித்தான் சொல்கிறான். கவிதையை நாடகப் படுத்தி இருக்கிறார் கவிஞர்.

### உத்திகள்

முதல் கவிதையின் தலைவி பிரிவாற்றாமையால் வாடுகிறாள். தலைவன் பிரிவால் அவள் தவிக்கும் தவிப்பைக் காட்டக் கவிஞர் நிறல்நிரைப்பொருள் வைப்பு முறையைக் கையாண்டிருக்கிறார்.

'நீரின் தண்மை சாரச் சார்ந்து
தீயின் வெம்மை தீரத்தீரும்' என்று சொல்லவில்லை. அதற்கு மாறாய் நீரையும் தீயையும் அருகருகே வைத்து அவைகளால் விளையும் தன்மைகளை அடுத்து அடுத்து வைத்திருக்கிறார். இது அவள் மனக் குழப்பத்தைக் காட்டுகிறது. முதலில் அவள் அவனோடு இணைந்திருந்த இன்பத்தை நினைத்துப் பார்க்கிறாள். பிறகு இப்பொழுது படும் துன்பம் அவளை வருத்துகிறது. இதைக் காட்டுவதற்கு நீரின் தண்மையை முதலில் சொல்லி தீயின் வெம்மையைப் பின்னால் சொல்கிறார். அவள் தவிப்பின் தீவிரத்தைக் கவிதையில் காட்ட வேண்டும். அவனுடைய குணத்தின் தீவிரத்தையும் சொல்ல வேண்டும். இரண்டையும் சொல்லும் போதே காதலின் தீவிரம் வெளிப்பட வேண்டும். இதைக் கவிதையில் கொண்டுவர வார்த்தைகளை அடுக்கிக் காட்டியிருக்கிறார். நீரின் இயல்பையும் தீயின் இயல்பையும் சொல்லும் போது இருமுறை அடுக்கிச் சொன்னவர் அவைகளோடு அவன் இயல்பை உவமிக்கும்போது மூன்று முறை அடுக்குகிறார்.

ஆசிரியப்பா ஏகாரத்தில் முடிவது சிறப்பானது என்பது இலக்கணம். அந்த இலக்கணத்தையே கவிஞர் உத்தியாகப் பயன் படுத்தி விட்டார். தீர்பொல்லாதே என்று அவள் வேதனையை அதிகப் படுத்திக் காட்ட இறுதி ஏகாரத்தைப் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்.

அணைப்பு கவிதையில் உத்தி மிகுந்த திறமையோடு பயன் படுத்தப் பட்டிருக்கிறது. காதலைப் பற்றிச் சொல்வதானால் காதலின் குணத்தை முதலில் நன்றாய்ப் புரிந்து கொள்ள வேண்டும். பிறகு அதை முழுமையாகச் சொல்ல வேண்டும். சொல்ல வந்த விஷயத்தை மேலும் சொல்வதற்கு இடம் இல்லாமல் இறுதியாகச் சொல்லி விட வேண்டும். இதைச் சாதிக்க கவிஞர் சி. மணி எடுத்துக்கொண்ட உத்தி புதுமையான வகையில் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. தீவிரமாகவும் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. சொல்ல நினைத்ததை வார்த்தைகளால் சொல்லாமல் உத்தியின் மூலம் முழுதாய் உணரும் வகையில் ஒரு சாதனையாகச் செய்து காட்டியிருக்கிறார்.

பிரசவ வைராக்கியம் எவ்வளவு நேரம் நீடித்திருக்கிறது? புணர்ச்சியின் சோர்வில் மயங்கித் தூங்குகிற மனிதன் மீண்டும் காதலோடு விழித்தெழுகிறான். ஒரு முறை அனுபவித்த இன்பம் தானே என்று சலிப்பு ஏற்படுவதில்லை. மீண்டும் மீண்டும் இரவின் வருகையை எதிர்பார்த்து விழித்துக் கொண்டிருக்கிறான். மனிதன் லட்சியத்தோடு வாழும் காரணங்களில் ஒன்று இந்த காதல். புணர்ச்சி இன்பம் ஒரு முறையில் தணிந்துவிடுமானால் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் அது ஒருவிழாவாக வந்துபோய்விடும். ஆனால் புணர்ச்சி இன்பம் ஒரு இரவோடு தணிந்து விடுவதில்லை. இன்னும் இன்னும் என்று புதுப் புதுக் கற்பனைகளோடு மீண்டும் நினைவில் ஊறிக்கொண்டிருப்பது.

தலைமுறை தலைமுறையாக உலகம் சுழல்வதைப் போல அது சுழன்று கொண்டேயிருக்கிறது. ஆரம்பம் எது முடிவு எது என்று தெரியாதபடி அது சுழன்று கொண்டேயிருக்கிறது. இது தான் காதலின் உண்மையான குணம். இதைக் கவிதையில் காட்ட வேண்டும் ஆகையால் கவிஞர் இக்கவிதையை முடிக்க வில்லை. மீண்டும் தலைப்புக்குப்போய் கவிதையை மீளவும் ஆரம்பிக்கிறார். சக்கரத்தைப் போல கவிதை சுழன்று கொண்டே இருக்கிறது.

இன்னொரு முறை கவிதையைப் படித்துப் பார்க்கலாம்.

என்னை
நீரா யணைத்தாய் அணைத்து
விட்டதும் கரியானேன்; ஆனதும்
இருவிழிப் பொறியால் தீ மூட்டித்
திரும்ப நெருப்பாக்கி

கவிதை முடியவில்லை.

திரும்ப நெருப்பாக்கி

என்னை
நீரா யணைத்தாய் என்று தொடர்ந்து
வருகிறது.

திருக்குறளோடு சேர்த்து மூன்று கவிதைகளும் புணர்ச்சியைப் பற்றித்தான் பேசுகின்றன.

அந்தப் புணர்ச்சியை அணைப்பு கவிதையில் நீரா யணைத்தாய் என்று புணர்த்திக் காட்டுகிறார்.

குழப்பமும் தெளிவும்

இக்கவிதையை மேம்போக்காய்ப் பார்க்கிற போது தெளிவாக இருப்பதைப் போலத்தோன்று கிறது. ஆனால் ஆழமாகப் பார்க்கிற போது குழப் பம் தோன்றுகிறது. எப்படி இந்தக் குழப்பம் வந் தது? கரியானேன் என்ற வார்த்தைதான் குழப் பத்தை உண்டாக்குகிறது. மேலும் அந்த வார்த்தை அமங்கலமாய் ஒலிக்கிறது. ஏன் இந்தக் குழப்பம்?

அணைத்தல் என்பது சிலேடைச் சொல், ஒரு வரை ஒருவர் அல்லது ஒன்றை ஒன்று தழுவுதலை யும், எரிந்து கொண்டிருப்பதை அவிப்பதையும் குறிக்கிறது இந்தச் சொல். அவள் நீராக உருவ கப் படுத்தப் பட்டிருக்கிறாள். நீர் நெருப்பைத் தழுவும் போது தோன்றுவது கரி இது தவிர்க்க முடியாதது. நீர் நெருப்பை அணைக்கும்போது உடனடியாகத் தோன்றுவது கரி புணர்ச்சியில் இது நிகழுமானால் நீடித்த இன்பமற்றுப் போய் விடாதா என்று நினைக்கத் தோன்றுகிறது.

இந்தக் குழப்பத்திற்கு கவிதையில் விடை வைத்திருக்கிறார். நீர் நெருப்பை அணைக்கிற போது நெருப்பு கரியாகும் வேகத்தில் நீரும் ஆவி யாக மாறுகிறது. அவன் கரியாகும் அதே வேகத் தில் அவளும் ஆவியாகி விடுகிறாள், சமகாலத்தில் இன்பத்தின் உச்ச நிலையை இருவரும் அடைகின் றனர் என்ற தெளிவு கிடைக்கிறது.

மேலும் தொடர்ந்து போனால் இன்னும் தெளிவு கிடைக்கிறது. அணைத்து விட்டதும் கரி யானேன் என்ற வரி அந்தத் தெளிவைக்காட்டு கிறது. விட்டதும் என்ற சொல் அவன் அவள் அணைப்பில் இருக்கிற வரையில் தணலாக இருந் தான் என்னும் பொருளை மறைமுகமாகத் தரு கிறது. இன்பத்தின் நேரம் நீடித்திருந்ததாகவும் உணர்த்துகிறது. காலம் காட்டுகிறது. அவள் அணைப்பிலிருந்து விடுபட்டவுடன் அவன் கரியாகி விடுகிறான்.

அவள் அணைப்பு இல்லா விட்டால் வாழ்க் கையில் மங்கலம் இல்லை. அமங்கலம் தான். இதைத் தான் காட்டுகிறது கரியானேன் என்ற சொல்லில் தொனிக்கும் ஒலிக் குறிப்பு. அவள் இல்லாவிட் டால் அவனுக்கு வாழ்க்கையில்லை

அவள் அவனிடத்தில் மிகுந்த கருணை உள்ள வள் போலும். அவனை நீண்ட நேரம் கரியாகவே வைத்திருக்கவில்லை அவள். அவன் கரியானதும் மீண்டும் இருவிழிப்பொறியால் நீ மூட்டித்திரும்ப நெருப்பாக்குகிறாள்.

—கரியானேன்; ஆனதும்
இருவிழிப் பொறியால் நீ மூட்டித்
திரும்ப நெருப்பாக்கி
என்னை
நீராய அணைத்தாய்.

பழைய கவிதையில் குழப்பம் இல்லை தலைவன் பிரிவை ஆற்ற மாட்டாது தலைவி குழம்புகிற மனக் குழப்பம்தான் மறைமுகமாக அங்கு காட் டப்பட்டிருக்கிறது. ஆனால் இக்கவிதைக்குள்ளேயே குழப்பம் இருக்கிறது. வார்த்தைகளை உபயோ கித்த விதத்தால் ஏற்பட்ட குழப்பம், கவிதை அமைப்பின் குழப்பம். வேண்டுமென்றே கவிஞன் செய்த குழப்பம். இந்தக் குழப்பம் தான் கவிதை யின் நயத்தை மிகவும் மேலே உயர்த்தி விட்டது.

மேலும் இந்தக் குழப்பம் இன்னொரு விஷயத் தையும் காட்டுகிறது பழைய கவிதையின் தலைவி தலைவனை விட்டுப் பிரிந்திருக்கிறாள். இருவருக்கும் இடையில் இருக்கும் இடைவெளி மிக நீண்ட தூர மாக இருக்கவேண்டும். நீர் நெருப்பு உவமையைக் கையாளும்போது அவை தூரம் காட்டும் விதத் தில் கையாண்டிருக்கிறார் கவிஞர். ஆனால் இங்கே தலைவனுக்கும் அவன் காதலிக்கும்இடையில் இருக் கிற தூரம் அதிகமானதாகத் தெரியவில்லை. அவள் அணைப்பை விட்டதும் கரியானேன் என்கிறான். அவள் இல்லாமல் அவனால் இருக்க முடியாது போலத் தெரிகிறது. மிகவும் மென்மையான உள் ளம் படைத்தவன் போலத் தெரிகிறான் அவன். அவளுடைய பிரிவைத் தாங்குகிற சக்தி அவனுக்கு இருக்குமா என்பது சந்தேகமாகத் தோன்றுகிறது கரியானவுடன் நெருப்பாக்கி மீண்டும் நீராய் அணைப்பதால்தான் அவன் உயிர் வாழ்ந்து கொண் டிருக்கிறான்என்றும் தெரிகிறது. தொடர்ந்துநடை பெறுகிற இந்தச் செயல் தடைப்பட்டு விட்டால் அவனால் வாழமுடியாது என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் அவளை அவன் நீண்ட நேரம் பிரிந்திருக்கிறான் என்று நினைக்கத் தோன்றவில்லை. அவள் அவன் அருகிலேயே இருக் கிறாள். அவள் வருகைக்காக அவன் காத்துக் கொண்டிருக்கிறான். காத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தையே அவனால் தாங்க முடியவில்லை. மனதில் நீக்கமற நிறைந்திருக்கும் அவளையே முன் னிலைப் படுத்தி தன் சிந்தனையைச் சொல்கிறான். அவளுடைய அடிமனத்திலிருந்து எண்ணங்கள் கொத்துக் கொத்தாய் வெளிவருகின்றன. இதைத் தான் இந்தக் குழப்பமெனும் உத்தி முறை காட்டு கிறது.

அணைப்பின் தனிச் சிறப்பு :

அணைப்பு இல்லாமல் புணர்ச்சி இருக்கமுடி யாது. புணர்ச்சிக் 'காலத்தில் மேல் தூக்கி நிற்கும் உணர்வு; ஒன்றை ஒன்று அணைக்கிற அணைப்பில் ஒன்றாய்விட மாட்டோமா என்ற தவிப்புத்தான். உடலின் மேடும் பள்ளமும் ஒரே பலத்தில் சமமாய்த் தழுவவேண்டும் என்ற துடிப்புத்தான் முனைந்து நிற்கிறது

விவேக சிந்தாமணியில் ஒரு பாடலில் அணைப் பைப் பற்றி ஒரு இடம் வருகிறது.

''துப்புறச் சிவந்த வாயாள் தூய பஞ்சணை
யின்மீதே
ஒப்பற்ற கணவனோடே ஓர்லீலை செய்யும்
போது
கற்பகம் சேர்ந்த மார்பில் கனதனம் இரண்
டும் தைத்தே
அப்புறம் உருவிற்றென்றே அங்கையால்
தடவிப் பார்த்தாள்.''

திருக்குறள் காமத்துப் பாலில் புணர்ச்சி மகிழ்தல் என்ற அதிகாரத்தில் ஒரு குறள் இந்த அணைப்பைப் பற்றிச் சொல்கிறது.

"வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு".

ஒரு பொழுது நெகிழாமையிற் காற்று இடையறுக்கப் படாத முயக்கம் ஒருவரையொருவர் விழைவார் இருவர்க்கு இனிது என்கிறார்.

இந்த இரண்டு பாடல்களும் அணைப்பு முழுமையாக இருக்கவேண்டும், இருவர் ஒருவராக வேண்டும் என்னும் தீவிரமான தவிப்பைத்தான் காட்டுகின்றன.

அணைப்பு கவிதையில் அவளை நீராக உருவகப் படுத்தியிருக்கிறார். மிகவும் பொருத்தமான இடத்தில் இந்த உருவகம் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. நீரைப்போல அவ்வளவு பொருத்தமாக அணைக்கிற பொருள் வேறு இருப்பதாகத் தெரியவில்லை ஒரு இடம் என்றில்லாமல் உடல் முழுதும் தழுவும் குணம் உள்ளது நீர். ஆழமாகப் போகப் போக அதன் அழுத்தம் வேகம் உள்ளது. அவள் நீராய் அணைக்கிறாள் அவனுக்குத் திருப்தி தரும் விதத்தில் அவள் அணைக்கிறாள். வேறு எதுவும் நினைவில் இல்லாத வகையில் அவள் அணைப்பு இருக்கிறது. பூரணமாக இருக்கிறது. அவள் அணைப்பை வேறு எப்படிச் சொன்னாலும் மனதிற்கு நிம்மதி இருக்காது போலத் தெரிகிறது. அதனால் அவளையே நீராக உருவகப்படுத்தி விட்டார் கவிஞர்.

அவர்களுடைய காதல் மிகவும் உயர்ந்தது. அதற்கு ஈடுசொல்ல ஒன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

காதலைப் பற்றிய கவிச்சிந்தனையின் பலவழியில் ஒரு வழியின் எல்லையின் இறுதியில் விழுந்த முற்றுப்புள்ளி இக்கவிதை

## லட்சியம்

தர்மு சிவராமு

கடலும் சுருங்கும்
நெருப்பும் தடுமாறும்,
காற்றின் விரல்களும்
வெறும்வெளி வீணையில்
பேசாமல் மடங்கும்;
வானத்தில்
பரிதியே நின்று
கிணற்றுள் தன் பிம்பத்தை
பட்டம் விட்டாலும்
குடிதண்ணீர்
வாளி வீச்சில்
நடுங்காது நிற்குமா
அலைக்காமல்தான்
அள்ள முடியுமா ?

## மோகன வேளை

ம. ந. ராமசாமி

ஆங்கே ஒரு கல்.

வரலாறு தன்னுள் அடக்கி,
வரும்தருணம் என்றோ என
அந்தமோகன வேளைக்கு
காத்திருக்கும் கருங்கல்.

சீரியசிற்பியின் சிற்றுளிமுனையில்
எழிற்சிலை உருவாகும் வெண்ணெய் அது
பெண்ணெனவே ஆகிவிட
நீர், நெருப்பு, பெருங்காற்று,
வெய்கதிரோன் நீள்கரங்கள்
வருவன, செல்வன ஏதும்காணாது
அந்த மோகனவேளை என்றோஎன
ஆடாது அசையாது காத்துக்கிடக்கும்
உயிர் அது.

வேளைவந்ததும் வேள் அதோவர
செவ்வடிபட்ட இடமெல்லாம் செழிப்பு
தாள்பட்ட தடம் எல்லாம் வாழ்வு
கால்கண்ட கருங்கல்லில் உயிர்ப்பு
மோகனவேளையில் உருப்பெற்றது கற்பு.


எழுத்து

தீபாவளி மலர்

தயாராகிறது

ஏழாண்டு கால நீடித்த
பணியின் பின்னணியில்
இலக்கியக் கட்டுரைகள்,
கவிதைகள், சிறுகதைகள்
தாங்கி வரும் தனி ஏடு.

சந்தாதாரர்களும்
பிற வாசகர்களும்

தங்கள் பிரதிகளுக்கு உடனே
பதிவு செய்து கொள்ளவும்.

விலை : ரூபாய் இரண்டு. தபால் செலவு தனி.

குறிப்பு : மலரின் விலை ஆண்டுச் சந்தாவில் அடங்காது.


EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Cenrtal Press, 97, Big Street, Triplicane Madras-5.